
பதிவு எண் 2041

மகாத்மா காந்தி வாழ்க

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு $1\frac{1}{2}$ அணா




| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. | 8. |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. | 2. |
| ☞ தனி விகிதமும் உண்டு. | |

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஞு புரட்டாசி 23 மீ௳ (9—10—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 24.

## கணித சோதிடம்


பாசித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவார் பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. அருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,

முதலியார் பேட்டை, புதுச்சேரி

இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனா இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ், மைலாப்பூர்-மதருஸ்.

13-ம் வருடம பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது

## 'ஆனந்த போதினி'.


ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.
48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.
தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.
13-வருடங்களாக நடைபெற்றுவருவது

20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது

இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு
வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனும்.

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு $3\frac{1}{2}$"x $2\frac{1}{2}$" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.
பிருமம சமாஜம், ஜி. டி. மதராஸ்

## 8000 மைலுக்கு அப்பாலுள்ள பிஜியில் நம் தமிழ் மக்களின்

# விண்ணப்பம்.

கனவான்களே!

பிஜி ஏற்பட்டது முதல் ஜன சகாயத்திற்கும் உடல் சகாயத்திற்கும் முதன்மையாக வந்தவர்கள் நம் தமிழ் பெருமக்களேயாவர் ஆகிலும் தற்சமயம் கஷ்டப்படுபவர்களும் தமிழ் மக்களேயாவர். இருந்தபோதிலும் தற்சமயம் பிஜியில் வாழும் ஜனங்களுள் 65000 நம் தமிழ் மக்களும், 4000 ராஜகுலத்தை சார்ந்தவர்களும், 80000. பிஜி ஏற்படாதது முதல் பிஜி காடுகளில் வசித்து வந்த பயங்கரமான தோற்றமும் பேச்சுமுள்ளதான ஜனங்களாகிய Fijiyans பிஜியர் எனப்படுவோர்களும் இன்னும் சில சாதியர்களும் ஆவார்கள். தவிரவும் இதில் எல்லா ஜன வகுப்பைவிட அதிகதொகையில் இருப்பது நம் தமிழ் மக்களே! ஆகிலும் பிஜியில் நம் தமிழ் மக்களுள் கற்றறிந்தவர்கள் 300 பேர்களே. தவிர மற்ற ஜனங்கள் எல்லோரும் கல்வி அறிவு இல்லாத ஜனங்களாக இருப்பதால் இவர்களுக்கு பெரும் துன்பங்கள் விளைகின்றன. எப்படியெனில் பிஜியில் எல்லா கோர்ட்டு (நியாயஸ்தலங்களிலும்) களிலும் வக்கீலாக இருப்பது ஆங்கிலம் கற்று வா படித்து வரும் வெள்ளைக்காரர்களே தவிர நம தமிழ் மக்களுள் ஒருவரும் காணோம். முதன் முதலில் பிஜிக்கு வந்த ஜனங்களில் ஒருவராகிய D M Mani Lal, M. A. L. L. B., Barrister at Law. Now of Lucknow, India. மிஸ்டர் மணிலால் அவர்கள் ஆங்கிலம் கற்று சட்டம் அறிந்து வந்து பிஜியில் வக்கீலாக 7, 8 வருஷமிருந்து வேலை பார்த்து நம தமிழ் மக்களுக்கு மாபெரும் உதவிகளைச் செய்தும் பணச்சகாயம் செய்தும் அதிகத்தொகையாயிருக்கும் நம் குடிகளுக்கு பெரும் தலைவராகயிருந்து பிஜியில் நல்ல புகழுடன் இருந்து வந்தவர் சென்றார். பிறகு குடிகளுக்கு கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டது எப்படியெனில் தற்சமயம் பிஜி நியாயஸ்தலங்களில் தமிழ் கற்றறிந்ததும், சட்டமறிந்தும், ஆங்கிலமறிந்தும நம் தமிழ் மக்களில் ஒருவரும் வக்கீலாக இல்லாத கொடுமையால் நம தமிழ் மக்களுள் ஏற்படும் கஷ்டமான வழககு விசாரணைகளை எல்லாம் ஒருவரிடம் தெளிவாகச் சொல்லி தீர்த்துக்கொள்ள தற்சமயம் முடியாமல், வெள்ளைக்காரவக்கீல்களிடம் ஏராளமான பணம் கொடுத்தும், உடலுழைப்பு செய்தும் தமது வழககுகளில் வெற்றி பெறாமல் ஏமாந்து விடுகின்றார்கள்

ஆதலால் தற்சமயம் நம் இந்திய வக்கீல் எவரேனும் பெரும் முயற்சி எடுத்து பிஜியில் குடிவாழும் 65000 தமிழ் மக்களுக்கு பெருந்தலைவராகவும் பிஜி நியாயஸ்தலத்திற்கு தமிழ் கற்றறிந்த வக்கீலாகவும் ஒருவர் வருவாராயின் பணத்திற்கும் மேலும் உதவிக்கும் ஒரு குறைவும் கிடையாது. இதில் குறிப்பிட்டவாறு பணம் செலவிட்டுக் கொண்டு வர முடியாமல் போனால் ஒரு பாரிஸ்டராகவா ஏற்பட்டாரேயாகில் உடனே அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலாசத்திற்கு ஒரு லெட்டர் அனுப்பினால் வேண்டிய உதவி செய்யத்தயாராய் இருக்கின்றோம்.

மேலும் பிஜியில் பொதுவாக எல்லாக்காரியத்தையும் எல்லா வேலைகளையும் நடத்துவது பெருந்தொகையாகிய நம் தமிழ் மக்களேயாவர். பிஜியில் இருக்கும் பெரும் கம்பெனிகளில் முதல் முதல் கொண்டு ஊக்கத்துடன் வேலை செய்து கம்பெனிகளுக்கு பெரும் லாபத்தை செய்வது நம் குடிமக்களே. எப்படியெனில் பிஜியில் கம்பெனிகளில் எல்லாவற்றிலும் பெரிய C. S. R Co. என்னும் சர்க்கரை செய்யும் தொழிற்சாலையில் சுமார் 30000 பேர் வேலை செய்கிறார்கள். இவ்வளவு பெரும் நம் தமிழ் மக்களாகவேயிருந்து அந்த தொழிற்சாலையில் விடா முயற்சியுடன் வேலை செய்து வருடம் ஒன்றுக்கு 45000000 பவுன் லாபம் செய்கின்றார்கள். மேலும் இத்தொழிற்சாலைக்கு பெரும் உதவியாகயிருந்து வெகு நிலங்களைப்பற்றி கரும்பு பயிரிட்டு கம்பெனிக்கு கொடுப்பதும் நம் குடி ஜனங்களே. இன்னும் பிஜியில் எல்லாக் கோர்ட்டுகளிலும் தொழிற்சாலைகளிலும் உத்தியோகசாலைகளிலும் கஷ்டப்பட்டு வேலை செய்பவர்களும் நம குடி ஜனங்களே. நாம தொகையில் இவ்வளவு அதிகமாயிருந்த போதிலும் பிஜி லெஜிஸ்லேடிவ் கவுன்சிலில் ஒரே ஒரு ஒன்றுக்கும் உதவாத மெம்பரை வைத்திருக்கிறார்கள். இது எவ்வளவு கொடுமையாகத்தான் இருக்கிறது. காட்டை வெட்டி ஊராக்கிக்கொடுத்த நம் பெருந்தொகைஜனத்துக்கு ஒருவன் இருப்பதென்றால் பெருங் கொடுமை. 4000 வெள்ளைக்காரர்களுக்கு சட்டசபையில் 16 மெம்பர் இருந்தால் 65000 தமிழ் மக்களுக்கு மேற்கண்டவாறு பார்த்தால் எவ்வளவு பேர் இருக்கவேண்டும். 80000 பிஜி ஜனங்களுக்கு இரண்டு மெம்பரையும் கொடுத்து மக்கள் இஷ்டப்படி தெரிந்தெடுத்து அனுப்புவதற்கு பிஜி கவர்ன்மெண்ட் இடங்கொடுக்காமல் ஜனங்களை வருத்துகின்றது. தற்சமயம் இருக்கும் மெம்பரோ சென்னை சட்டசபையில் இருந்த எனது நண்பர் ஒப்பிளேசப்பா என்னும் மெம்பரைப் போல் எந்தப்பக்கம் மெஜாரடீ இருக்கிறதோ அந்த பக்கத்தில் சேர்ந்தவராய் இருக்கின்றார். ஜனங்கள் நன்மைக்காக பாடுபடும் மெம்பர் ஒருவரும் இல்லை. இதைப்பற்றி பிஜி கவர்ன்மெண்டும் கவனிப்பதில்லை. பொதுவாக பிஜியில நம் ஜனங்கள் ஒருவரும் இல்லாமல் போனால பிஜிக்கு நிச்சயமாய் அனர்த்தம் விளையுமென்பதில் ஐயமில்லை. மேற்குறிப்பிட்டவாறு நம் குலத்தில் உதித்த ஒரு வக்கீலும் பிஜியில் இல்லாதிருப்பதால் தற்சமயம் பிஜி நியாயஸ்தலங்களில் பாரிஸ்டர் என்று இருப்பவர் அனைவரும வெள்ளைக்காரர்களாயிருப்பதால கிடைப்ரன ஒரு வெள்ளைக்காரனுக்கும நம் குலத்தைச்சார்ந்த ஒருவனுக்கும ஒரு பெரும முக்கியமான கேஸ் நடக்கும் மாகில் ஒரு வெள்ளைக்கார வக்கீலை நம குடி மக்கள்கள் போய் 'தாங்கள் என வழக்கை ஏற்றுக்கொள்ளவேண்டும்' என்று சொல்லும் காலத்தில் வக்கீல் முடியாது என்றால் பெரும் வழக்குகளை நம் ஜனங்கள் இழந்து விடுகிறார்கள். ஆகவே நம் வக்கில் ஒருவர் இருந்தால் அந்த வழக்கில் மன்றாடி வெற்றி பெறலாம். தவிரவும் முக்கியமாய் பிஜியில் மாதம் ஒரு முறை ஏற்படும் சட்ட சபையில் நம் பொது ஜனங்களின் குறைகளை எடுத்து பேசும்படி ஒரு மெம்பர் இருப்பாராயின் பொது ஜனங்களுக்கு ஒரு குறைவும் கிடையாது.

தவிரவும் தற்சமயம் பிஜி லெஜிஸ்லேடிவ் கவுன்சிலில் பொது ஜனங்களாகிய நம் தமிழ் மக்களுக்கு என்று, பிஜி கவர்ன்மெண்ட் பெரிய மெம்பர்கள் ஒன்றுகூடி ஒருவரை ஏற்படுத்தியுள்ளார், இவரோ சாதியில் பிராமணன். இவரை பொது ஜனங்களின் நன்மை தீமைகளை சட்ட சபையில் எடுத்துக் கூற வைத்திருக்கிறார்களே தவிர இவரை மாதம் ஒரு முறை கூப்பிட்டு தேத்தண்ணீர் சாப்பிட வரவழைக்கவில்லை. இவர் முதன் முதலில் பிஜி ஆனரெரி இந்திய மெம்பராய் இருந்த வருங்காலத்தில் நம் பொது ஜனங்கள் இவர்மேல் சற்று விருப்பம் கொண்டனர். அந்தக் காலத்தில் டைபார் பிஜி கவர்ன்மெண்டுடன் கலந்து பேசிக்கொண்டு கிடைச்சென தன வேலையை விட்டார். எனெனில் 4 வருஷத்திற்கு முன்பு பிஜியில் ஜன தலைவரி வருடம் ஒன்றுக்கு ஒரு பவுன் விதம் ஏற்படுத்தின காலத்தில் தன்னை கேட்காமல் செய்தார்கள் என்று ஒரு பெரும் பொய்யைப்புகுத்தி தம் வேலையினின்று நீங்கி தன் அருமைப்புத்திரர்களுக்கு பெரும் வேலைகளை பற்றிக்கொடுத்து தற்சமயம் இந்த பிராமணன் பிஜி சட்ட சபையில் சேர்ந்து மெம்பராய் விட்டார். இவரோ ஜனங்களின் கஷ்டத்தை கவனியாமல் வெள்ளைக்காரர் நேசத்திற்கும் பணத்தின் ஆசைக்கும் அதிகம் விரும்பி எந்த பக்கம் மெஜாரடி அதிகமாய் இருக்கிறதோ அந்தப்பக்கம் நிற்கும் பெரும் சமரசராய் இருக்கிறார்.

ஆதலால் இந்தப் பெரும் ஏற்பாடுகள் எல்லாவற்றிற்கும் இணங்கியும் மேலும் பிஜியில் வாழும் ஜனங்களுள் நம் 65000 ஜனங்களுக்கு ஒரு பெரும் வீடாயும் (தலைவராயும்) பிஜிபார்லிமெண்டிற்கு ஒரு மெம்பராயும் பிஜி நியாயஸ்தலத்திற்கு நம குடி மக்களுள் ஒரு பெரும் வக்கீலாகவும் வந்து பிஜியில் வாழும் ஜனங்களுக்கோர் உதவிசெய்வாராயின் இது ஒரு பெரும் புண்ணியம். இத்தகைய உதவிகள் எல்லாவற்றையும் பிஜியில் வந்து முன்னின்று செய்ய ஒரு பெருமான் இந்தியா நியாயஸ்தலத்தில் வக்கீலாக (பாரிஸ்டராக) இருந்து பிஜிக்குவர முந்துவோர். அடியிற்கண்ட விலாசத்திற்கு ஒரு கடிதம எழுதி அனுப்புவாராயின் இக்கணமே உதவிசெய்யத் தயாராயிருக்கிறோம்.

ஜி. எம். சமரசம், நசூரி.

மேல் விலாசம்:—

ஜி. எம். சமரசம்
C/o எஸ். கே. நாராயண பிள்ளை,
லா கிளார்க்கு,
நசூரி, பிஜி தீவு.

# இந்துமதமும் வைதீகமும் மத்தியில் மகாத்மா காந்தியும்.

(கைவல்ய சாமியார் எழுதினது)

கும்பகோணத்தில் வைதீக பார்ப்பனர்கள் மகாத்மாவைக் கண்டு பேசிவிட்டு வந்தபின் ஒரு சபை கூடி, "மகாத்மா இந்துசாஸ்திரங்கள் வேதங்கள் இவற்றின் மகத்துவத்தைத் தெரிந்துகொள்ள போதிய சமஸ்கிருத ஞானம் பெற்றிருக்கவில்லை. தீண்டாமை, பாலிய விவாகம் முதலியவைகட்கு இவர் சொல்லுவதும் சரியில்லை, தீண்டாமை, பாலிய விவாகம் விலக்க சாஸ்திரம் இடங்கொடுக்கவில்லை. பகவத்கீதை படிக்க இனியும் அநேகருக்கு பக்குவம் வரவில்லை, ஆனதால் இவர் சொல்லுவதைக்கண்டிக்கவேண்டும்" என்னும்கண்டனத் தீர்மானம் செய்தார்கள். இந்துமத சாஸ்திரத்தில் மகாத்மாவுக்கே பாண்டித்யமில்லை என்று பண்டிதர்கள் சொல்லுகையில், என்னைப்போன்றவர்கள் வியாசத்திற்கு என்ன இந்த சாஸ்திர பழக்கமிருக்கப்போகிறதென்று மதிப்பார்கள் என்கிற விஷயம் கவனிக்கப்பட வேண்டியதே. இது படிப்பவர்கட்குத் தோன்றுவதும் சகஜம். இந்த பண்டிதர்களுடைய இந்த சாஸ்திர தர்க்கம் பொது அறிவுடையவனிடம் அரை நாழிகைகூட நிற்காது என்பதற்கு "மனசாக்ஷிக்குவிரோதமானதையும், மனப்பான்மையோருடைய நலத்திற்கு விரோதமானதையும், அஹிம்சை சத்தியம் இவற்றை வற்புறுத்தாத எதையும் சாஸ்திரமென்றோ அல்லது தர்மத்தின் அங்கீகாரத்தையும் பெற்றதென்றோ நான் ஏற்றுக்கொள்ளுவதில்லை" என்று பண்டிதர்களிடம் மகாத்மா சொன்ன பதிலே போதுமானது. வேதத்தின் கர்த்தாவான ரிஷிகளின் வார்த்தைகளையும், அதை பிரபல்யப்படுத்தின ஆசாரிகளின் வார்த்தைகளையும், அதை அறிந்து வஞ்சனையாலும் ஏமாற்றாலும் மோசம் போகாமல் தன் லாபத்தைச் சிந்திக்காமல் உண்மை சத்தியம் இவற்றை அனுசரித்துச் சொன்ன மகான்களின் வார்த்தையையும் ஆதாரமாகக் கொண்டு இந்த வியாசம் எழுதப்படுகிறது இதை படிப்பவர்கள் மேல்வாரியாகப் படித்து எறிந்து விடாமல் பின்னுமொருதரம் படித்து மனதுக்குச் சிறிது சிரமம் கொடுத்து ஆராய்ச்சிசெய்து கவனியுங்கள். வயிற்றுப்பிழைப்பிற்காக "குடி அரசு" வரவில்லை உங்கள் சமூகங்களின் உயர்வுக்கே வந்திருக்கிறது என்று பத்திராதிபர் சொல்லுவது சத்தியத்திலும் சத்தியமே. அதில் வியாசம் எழுதும் எனக்கும் வயிறு ஒரு ஜாண்தான். பார்ப்பானையும் இந்துசாஸ்திரங்களையும் குற்றம்சொல்லி உங்களாலோ மற்றவர்களாலோ லாபமடைய கடவுள் என்னை வைத்திருக்கவில்லை. படித்த படிப்பிலும் ஆராய்ச்சியிலும் உண்மை சத்தியத்திலும் உள்ளதைச் சொல்லவே கடவுள் என்னைத் தூண்டுகிறார். நானும் இந்த இந்து சாஸ்திரம் படித்தவன் 'சாஸ்திரங்களை நம்புகிறவன்' மதத்திலிருந்து வடக்கு இமயசேதுபரியந்தம் புகாத கோவில்களும் முழுகாத தீர்த்தங்களும் அதிசொல்பமே இந்துசாஸ்திரங்களைத் தெரியாமல் குருட்டுப் பழக்க வழக்கங்களையே மதமென்றும், அதை அனுசரித்து புரோகிதன் காலில்விழுவதே அதன் பலனென்றும் நம்பி, நாம் செய்யும் கொடுமையால் நம்மை அனுசரிப்பவர்களெல்லாம் அந்நிய மதத்திற்குப்போய் நமக்கே சத்துருவாய் நம்மதத்தை நாசமாக்க ஏதுவாயிருக்கும் காரியங்களை விட்டுவிடவேண்டுமென்றுதான் சொல்லுகிறோம். பார்ப்பானுக்கென்ன, எந்த ராஜா வந்தாலும் வீட்டையோ, தன் தேசத்தையோ, தன் மதத்தையோ நாசமாக்கியாவது உத்தியோகம் பெற்றுக்கொள்ளும் சாமர்த்திய மிருக்கிறது. அதை விட்டவனுக்கு கோவிலிருக்கிறது. கோவிலில் சதிர் சங்கீதமிருக்கிறது. அதை கும்பிட வருகிறவர்களின் உபசரிப்பிருக்கிறது. கோவில் சொத்திருக்கிறது. சோறிருக்கிறது. நாம இப்பொழுது நன்றாயிருக்கையிலேயேகோவிலும்சொத்தும்சனதேனகிறான். நாம் கெட்டுப்போனாலும் கோவிலும் சோறும் அவனுடையதென்கிற சௌரியம் அவனைவிட்டுப் போகாது எந்த அந்தஸ்தில வந்த பாப்பானும் 'எங்களுக்கென்ன சொம்பிருக்கிறது பிச்சை எடுக்கிறது எங்கள் தொழில்' என்று வாய் கூசாமல் சொல்லுகிறானே இதற்கென்ன அர்த்தம்? இவை இருக்கட்டும் எடுத்த விஷயத்தைக் கவனிப்போம். விஷயம் பெரியது சுருக்கியே சொல்லுகிறேன்.

நமது மதசமூகத்திற்கும் ஜாதிக்கும் பொதுப் பெயராக வழங்குவது இந்து என்னும் பெயர் 'ஹிந்து' என்னும் இப்பெயரானது பண்டைக்காலத்து பாரசீகர்களிட்ட பெயராகும். ஸமஸ்கிருத பாஷையில் 'ஸ' என்னும் எழுத்து வருமிடத்திலெல்லாம் பழயகாலத்துப் பாரசீக மொழியில் அது 'ஹ' என்னும் எழுத்தாய் மாறும். அப் பாரசீகருக்குப் பின் நம் நாட்டின் மேல்படை எடுத்து வந்த கிரேக்கர்களுக்கு 'ஹ' காரத்தை உச்சரிப்பது கஷ்டமாயிருந்தபடியால் அவர்கள் ஹிந்து என்னும் சொல்லிலுள்ள 'ஹ' காரமெய்யை ஒழித்துவிட்டனரென்றும் அதன்பிறகு நமக்கு 'இந்தியர்கள்' என்ற நாமதேயம் உண்டாயிற்றென்பது சரித்திரம். ஆகவே இப்பதத்திற்கு இந்தஸ் நதியின் அக்கரையிலுள்ளவர்களென்றே பொருள் 'ஸிந்து' என்னும் வடமொழிப் பதத்தைப் பண்டைக்காலத்துப் பாரசீகர் 'ஹிந்து' எனச் சிதைத்தது, அவ் 'ஹிந்து' நதியின் எதிர்க்கரையிலுள்ளவர்களை எல்லாம் இந்துக்களென்று அழைத்தனர். இவ்விதமாக இப்பெயர் பெற்ற மகமதிய அரசாக்ஷியிலே நாமே இப்பெயரை எடுத்து வியவகரிக்கப் போனோம். அதுமுதற்கொண்டு சாஸ்திரங்களுக்கும் இந்து சாஸ்திரமென்றே பெயரும் வந்தது. அந்த இந்து வேதமென்ற பெயருடன் விளங்கும் நூற்றிரட்டு யாதொரு புருஷராலும் செய்யப்பட்டதன்று. 'அபௌருஷேயம்' என்ற பெயர் வகுத்துக் காப்பதாக சொல்லப்படுகிறது வேதம் நித்தியமென்பதே இந்துக்களின் சித்தாந்தம். எப்படி சிருஷ்டியானது அடி முடியற்று அநாதி நித்யமாய் விளங்குகின்றதோ அப்படியே பிரம்ஞானமும் அநாதி நித்தியமாயிருக்கிறது. அத்தகைய நித்தியமான பிரம்ஞானத்துக்குத்தான் வேதமென்ற பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஞானத்திரட்டு ரிஷிகளென்ற சில புருஷர்களால் காணப்பெற்ற உண்மைகளாம் ரிஷி என்றால் மந்திரதிரஷ்டா, அதாவது கருத்தைக் கண்டறிந்தோன் என்று பொருள். இந்த வேதமானது கர்மகாண்டம் ஞானகாண்டம் என இரு பிரிவுகளுடையது. கர்மகாண்டம் பலவகையான யாகங்களைப்பற்றிக் கூறுவது. அவற்றின் பெரும்பான்மையும் இக்காலத்தில அனுஷ்டிக்க முடியாதென்று விடப்பட்டது. சிற்சில கர்மங்கள் பாப்பானின் பிழைப்பையும் அவன் கொண்டிருக்கும் மதப்பற்றையும் உத்தேசித்து வெவ்வேறுவிதமாய் இன்றும ஆசாரத்திலிருக்கின்றன. எந்த ஒழுக்கத்தை பாப்பான் விட்டாலும் இதை விடாமலிருப்பார்கள். வைதீகர்கள் இதையே இந்துமதமென்றும் இது கெட்டால் எல்லாம் பாழாய்ப் போய்விடுமென்றும் சொல்லுகிறார்கள். இன்னொரு முக்கியபாகம் கர்மகாண்டத்திலிருக்கின்ற வருணாச்ரம தர்மங்கள். இதைப்பற்றி முன்னமே 'குடி அரசு' உங்களுக்கு எடுத்துக்காண்பித்திருக்கிறது. பாப்பானின் கணக்குப் பிரகாரம் பார்த்தால் வருணாச்ரமமிருக்க ஞாயமில்லை. கர்மகாண்டப் பிரகாரம் பார்த்தால் நடக்க முடியவில்லையென்று பாப்பானாலேயே கைவிடப்பட்டது. ஞானகாண்டத்தில் வருணாசிரமம் சொல்லவேயில்லை. பின் ஏன் வருணாசிரமமென்று கூக்குரல் போடுகிறார்கள் என்றால் மற்றவர்களை அடிமைப் படுத்திக்கொண்டு தாங்கள் அனுபவித்த காரியங்களில் ஆசையே. புத்தியில்லாத ஜனங்களை ஏமாற்றி பொருள்பறித்து யுக்திக்கும் சாஸ்திரத்திற்கும் ஒத்துவராத கதைகளை இந்து சாஸ்திரமென்று சொலலும் பாப்பாரஜாதி என்கிற பேருடைய ஒரு ஜாதியிருந்தாலும் இந்து சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட பாப்பார ஜாதி இருக்கமுடியாது; இல்லவுமில்லை.

வேதசாரமென்றும் வேதமுடிவென்றும் வேதசிரசென்றும் புகழ்ந்தோதப்பட்ட ஞானகாண்டமாகிய உத்திரபாகத்தில்தான் இந்து மதத்தின் அத்தியாத்ம தத்துவங்கள் அடங்கியிருக்கின்றன: வேதஞானத்தின் சாரத்திற்கே வேதாந்தமென்றும் உபநிஷத்தென்றும் பெயரிடப்பட்டமையால் பரதகண்டத்திலுள்ள த்வைதிகளும் விசிஷ்டாத்வைதிகளும் அத்வைதிகளும் சைவ வைணவ இன்னும் இந்துமதத்தைச்சேர்ந்த அனைவர்களும் உபநிஷத்துக்களையே பிரமாணமாக அங்கீகரித்துத் தீரவேண்டும். அவரவர்கள் மதத்திற்குச் சிறப்பான பாஷியங்களை வைத்துக் கொள்ளுவதில் ஆக்ஷேபணையில்லை. பரதகண்டத்திலுள்ள வைதீக தர்சனக்காரர்களனைவரும் உபநிஷத்தின் பிரமாணத்தை ஒப்புக்கொள்ளவேண்டும். உபநிஷத்திலுள்ள தத்துவ சித்தாந்தங்கள் எக்காலத்தும் மாறாதன்மையன. ஏனெனில், அவை நித்தியமாயுள்ள சித் அசித் என்னும் பதார்த்தங்களை யாதாரமாகக் கொண்டெழுந்துள்ளமையாலென்க. ஆத்மா, முக்தி முதலியவற்றைப் பற்றிய சித்தாந்தங்கள் எக்காலத்தும் மாறா. பல்லாயிர வருடங்களுக்குமுன் எப்படி இருந்ததோ அப்படியே இன்றைக்கும் என்றைக்குமிருக்கும். உபநிஷத்திற்கு அடுத்தவைகள் ஸ்மிருதிகள். இவைகளும் ரிஷிகளால் எழுதப்பட்டவைகளானாலும் உபநிஷத்திற்குள்ள பிரமாணத்திற்கு தாழ்ந்தது. ஏனெனில் புறசமயங்களின் பிரமாண நூல்கள் ஸ்மிருதிகளை நோக்க எப்படித்தாழ்ந்தவையோ அப்படியே அந்த ஸ்மிருதிகளும் உபநிஷத்துகளுக்கு தாழ்ந்தபடியிலுள்ளவைகள். இந்துமதத்திற்கு ஸ்மிருதிகள் முழுவான பிரமாணங்களுமல்ல. உபநிஷத்திற்கு விரோதமாயிருப்பின் அந்த ஸ்மிருதி தியாஜ்யமாம். அதன் பிராமண்யம் போய்விட்டது இந்த ஸ்மிருதிகளும் காலந்தோறும் மாறிக்கொண்டே வருகின்றன. கிருதயுகத்தில் இன்ன ஸ்மிருதி பிரமாண மென்றும், திரேதா யுகத்தில் இன்ன ஸ்மிருதி பிரமாணமென்றும். துவாபர யுகத்தில் சில ஸ்மிருதிகள் பிரமாண மென்றும், கலியுகத்தில் சில ஸ்மிருதிகள் பிரமாண மென்றும் கூறப்பட்டிருக்கின்றன. ஜனங்களுக்குள் ஒரு காலத்திலுள்ள ரீதிநீதிகள் மாறிப் புதிய ரீதிகளும் சம்பிரதாயங்களும் குடிகொள்ளும்போது ஜனங்களின் ஆசார வியவகாரங்களுக்கு முக்கிய பிரமாணமாயுள்ள இந்த ஸ்மிருதிகளும் காலந்தோறும் மாறவேண்டிவருகின்றன. ஸ்மிருதிகளுக்கு தாழ்ந்தது புராணம். அதைப்போன்ற தந்திரங்களென்ற மற்றொரு வகை நூல்களும் உள, இவை பெரும்பான்மையும் புராணங்களைப் போன்றே கர்மகாண்டத்தை அனுசரித்து எழுதி தங்கள் காரியங்களையும் உள்நுழைத்து லாபத்தையே பிரதானமாகக் கொண்டு எழுதிவைத்து இந்து சாஸ்திரமென்று பேரும் கொடுத்து அதைப்பற்றியே நடக்கும்படியாகவும் சொல்லப்படுகிறது. ஆசாரங்கள் காலந்தோறும் மாறிக்கொண்டே வரவேண்டும். ஆகையால் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு விதமான ஆசாரங்கள் நியாயமாயிருக்குமே யன்றி அதே

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க).

# ஆசாரியன் யார்? வரிவாங்குபவரா?

அம்பொன் அரங்கர்க்கும் ஆவிக்கும்
அந்தரங்கச்
சம்பந்தம் காட்டித் தடைகாட்டி—உம்பர்
திவமென்னும் வாழ்விற்குச் சேர்ந்த
நெறிகாட்டும்
அவன் அன்றோ ஆசாரியன்

ஸ்ரீமணவாள மாமுனிகள் ஆசாரியன் இலக்கணம் இத்தன்மையதென அருளிச் செய்தனர். அவ்வாறு அர்த்தபஞ்சகஞானம் அறிந்தவனே ஆசாரியன் ஆவன. அர்த்தபஞ்சகமாவது:— பரமாத்ம சொரூபம், ஜீவாத்ம சொரூபம், ஜீவாத்மா பரமாத்மாவை அடைதற்குள்ள தடையின் சொரூபம், அத்தடையை நீக்கும் மார்க்கத்தின் சொரூபம், மோட்ச சொரூபம் என்பனவாம். ஆசாரியனின் தன்மை வெறும் வேடங்களினாலும் அன்று; பிறவியினாலும் அன்று. அர்த்தபஞ்சகஞானம் அறிந்து அஞ்ஞானத்தை நீக்குகிறவர் குரு. இக்காலக்குருக்களோ அஞ்ஞானமாய்க் குழியில் மூழ்கியவர். ஞானக்கண் அகக்கண் இல்லாதவர். ஆதலால் அவர்கள் குருடராயினர். குருக்களைப்பற்றித் திருமூலர் என்றும் சிறந்த யோகியர் கூறுவதாவது:—

குருடினை நீக்கும் குருவினைக் கொள்வார்
குருடினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழும் ஆறே.

பரம்பொருளைக் காட்டும் பரமாசாரியனை அடைந்து கடைத்தேறல் வேண்டும். தங்களது பிறப்பை கடைத்தேற்றவேண்டுமெனில் ஆகுங்காரியமா?

இப்பொழுது தேசத்தில் திரிந்துவரும் ஆசாரியர் என்னும் பார்ப்பன அய்யங்கார் கூட்டம் ஸ்ரீமத் இராமனுஜாசாரியார் காலத்தில் ஏற்பட்டதென்பர். ஆனால் ஸ்ரீ இராமானுஜர் ஸ்ரீ வைஷ்ணவசித்தாந்தம் சிறந்து செழித்து ஓங்குவதற்காக ஸ்ரீ வைஷ்ணவத் திருக்கூட்டத்தை ஒருங்கு திரட்டி அக்காலத்தினின்றும் கற்றுத்தேர்ந்த உபந்யாசகர் 74 பேரைத் தேர்ந்தெடுத்தனர். அவர்களே 74 சிம்மாசனாதிபதிகளென்றும் அழைக்கப்பட்டனர். அச்சிம்மாசனாதிபதிகளுக்குள் பார்ப்பனரும் இருந்தனர்; மற்றவரும் இருந்தனர். இவர்களனைவரும் பலவேறு பிரிவினராகப் பிரிந்து ஸ்ரீவைஷ்ணவ தருமத்தை பாரதநாடு முழுதும் பரப்பலாயினர். இத்தகைய ஆசாரியர்களான பார்ப்பனர் அக்காலம் மிக்கவறியராய்த் தமக்கென ஓர் பொருளும் இன்றிப் பிறர் கைப்பொருளிலேயே வாழ்ந்துவருபவராயிருந்தனர். இதற்குக் காட்டாக "கோடி கன்னிகாதானம், கந்தாடை" எனும் பெயர்களே சான்றாகும். ஆனால் "கோடி கன்னிகாதானம்" என்பதற்கு இதுகாலையுள்ள பார்ப்பனர் "கோடிக் கணக்கான கன்னிகைகளைத் தானமாகக் கலியாணம் செய்து கொடுத்ததினால் ஏற்பட்டபெயர் கன்யாதானம்" என்பர். இதனை உண்மையென்று யாவரே நம்புவர் பார்ப்பன குலத்தில் கோடி கன்னிகைகள் இருந்தது ஒருவருக்கா பல பெயர்களுக்கா கோடிக்கன்னிகளைத் தானம் செய்தது எத்தனை ஆண்டுகள்? கோடி கன்னிகைகளுக்கும் பிறந்த சந்ததியார் இதுகாலை எங்குள்ளார்? என்றும் வினாக்களை விடுப்போமாயின் கோடி கன்னிகாதானம் என்பதற்குப் பொருளே இல்லாமற்போய்விடும். திருவாளர் பூனமேடு அன்பர் எ. அப்பாய் நாயடு அவர்கள் ஆராய்ச்சியாகப் பொருள் கூறுவர். அதாவது:— அக்காலப் பார்ப்பனர் பெண்ணிற்கு மணம் செய்வதற்கும் பணமில்லாத வறியராயிருந்தமையால் அவருள் ஒருவர் "கோடி" என்னும் பெயருடைய கன்னிகையைத் தானமாகக் கலியாணம் செய்து கொள்ளக் கொடுத்துவிட்டமையால் அன்றுமுதல் அக்குலத்திற்கு "கோடி கன்னிகாதானம்" எனப்பெயர் வழங்கிற்று. கந்தல் ஆடை என்பது கந்தாடை என மருவிவழங்குகின்றது. கந்தாடை என்றால் கிழிந்த ஆடைகளை அணிந்திருப்பார் என்பதாம். அதாவது "டிசேலர்" என்பதுபோல் வழங்குகின்றது என்பதாம். இதனால் தெரிவது என்னெனில் அக்காலம் ஆசாரியர் என்னும் பார்ப்பனர் மிக்கவறியராய் இருந்து ஸ்ரீ வைஷ்ணவ சமயத்திற்காக உழைத்து வந்தனர் என்பதாம். ஆனால் பரம்பரையாகப் பார்ப்பனரே ஆசாரியனாக அமரவேண்டுமென்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. ஸ்ரீராமானுஜர் காலத்திற்குப்பின்னர் ஸ்ரீ விசிட்டாத்வைத சித்தாந்தத்தைத் தென்கலை, வடகலை என்னும் இருபிரிவுகளாகப் பிரித்துக் கட்சிகண்டவர்களுக்கு ஆசிரியர்களாகிய ஸ்ரீ மணவாளமாமுனிகளும், ஸ்ரீ வேதாந்த தேசிகருங்கூட ஆசாரியன் பார்ப்பனனாக இருக்கவேண்டுமென்பதாகச் சொல்லவில்லை. அவர்கள் அங்ஙனம் சொல்லவில்லை என்பதற்கு "அம்பொன்" என்ற மணவாளமாமுனிகள் பாசுரமே தக்க சான்றாகும். ஆகையால் பரம்பரை என்னும் வழக்கத்தைக்கொண்டு பார்ப்பனர் ஆசாரியராக வருவதற்கு எக்காரணமும் இல்லை, இல்லை.

இப்பொழுது ஊர் ஊராகச் சுற்றித்திரியும் அய்யங்கார் கூட்டத்திற்கு ஆசாரிய பீடம் வகிப்பதற்கு என்ன யோக்கியதை உண்டு? ஆசாரியன் அர்த்தபஞ்சக ஞானம் அறிந்திருக்கின்றனரா? ஆராய்ச்சியுண்டா? அனுபவம் உண்டா? ஆசாரியனாகயிருப்பவன் சீடர்களை நல்வழிப்படுத்தி உபதேசம் செய்து பரமாத்மாவை அறியும் அனுபவத்தையன்றோ உண்டாக்கல்வேண்டும் ஆன்மார்த்தமான வழியில் ஆசாரியன் இருக்கின்றனா? ஆசாரியன சீடனுக்கு உபதேசம் செய்வது யாது? அரிசி, பருப்பு, நெய், பால் இவைகள் வேண்டுமென்பதே. இவற்றினை அய்யங்கார் வேண்டுவதும், அம்மங்கார் சுவைபடச் சமைத்துப் போடுவதும், சீடர்கள் விலாப் புடைக்க உண்பதுவுமே உபதேசமும் பயனும் ஆகும். சாமியார் சாப்பாட்டுச்சாமியாராயினர். இச்சோறு போடுவதுடன் நின்றிருந்தால் இருவரும் உண்டதேனும் கண்டபலனாகுமே! நகரங்களிலும் பிற இடங்களிலும் இழியதுறைகளில் இறங்கிப் பெருங்கடன்பட்டு அக்கடன்களைத் தீர்க்கக் கிராமங்களைக் கொள்ளை செய்கின்றனர். அம்ம! அம்ம எத்தனை கொள்ளை? கொள்ளை? கலியாணம், பூணூல் கலியாணம், இவற்றிற்கும் நாமா கடன் பட்டிருக்கிறோம்! அதனுடன் அகன்றதோ? காதுகுத்தல், மூக்குக்குத்தல், சோறூண்ணல், காப்பணிதல், அரைநாண் கட்டல், வளையணிதல், மஞ்சள் பூசல், பிள்ளை பெறுதல், யாத்திரை போதல், தலை சிறைத்தல், பிரார்த்தனை செலுத்தல் இவ்வாறனைவற்றிற்கு எத்தனைக்கென்று வரி வாங்குவது. இன்னொரு நாணமற்ற, மனிதத்தன்மையற்ற ஒன்றற்கும் வரிவாங்குகின்றனர். என்ன அநியாயம்! அறிவீனம். கலியாணம் கட்டிக்கழிவதற்குத்தான் பணம் பறித்தனரோ. கொழுத்துத் திரிந்த குமரியும், குமாரனும் ஓர் அறையுள் தனித்து நுழைவதற்கும் பணம் பறிக்கின்றனரே! யாமும் கொடுக்கின்றனமே. நம்மைக் கூறுப்பர் ஆடுகள் என்றன்றோ அக்குருக்கள் கொண்டிருக்கின்றனர். ஆட்டினால் ஆடும் பாவைகள் என்றன்றோ அப்பார்ப்பனர் பற்றியிருக்கின்றனர்.

நம்மிடமிருந்து பலவழியிலும் அட்டைகளைப்போல பணத்தை உறிஞ்சிக்கொண்டு போய் நல்வழியில் செலவு செய்கின்றனரா? வாழ்கின்றனரா? ஆசாரியன் என்னும் பார்ப்பனன் களவு செய்கின்றனன், சூதாடுகின்றனன். கொலையும் புலையும் கொண்டுள்ளான். ஊரை இரண்டு செய்கின்றான். வழக்கு மூட்டிவிடுகின்றான். மன்றங்களுக்கிழுக்கின்றான். அழிவழக்கும் தொடர்கின்றான். சாமியார் காமியாராகின்றான். பொய்வேடத்தாலும் வஞ்சனைகளாலும் அறியாக் கைம்பெண்களை ஏமாற்றிப் பெரும் பொருள் பறிக்கின்றான். ஓர் சாமியார் காமியார் கடப்பாறையைக் கொண்டு ஸ்ரீமான் பாகவதர் இராமசாமி நாயுடு அவர்களைப் புடைக்க வந்தமை பொய்யாகுமோ! ஒரு கால் கலங்கல் என்னும் ஊரை கலியாணத்தை முன்னிட்டு இரண்டு படுத்தி கட்சிகளும் கலகங்களும் செய்வித்த கடப்பாறையின் கதை மறந்தோயா? ஆவரம்பாளையத்து ஆசாரிய குமாரன் திருட்டுத்தொழிலில் சிறை சென்றது தெரியாதோ! ஆனைமலைச் சாமியார் ஆண்டிற் கொருமுறை கடனுக்காக வரி வாங்குவது காணோமோ! இங்ஙனம் கடப்பாறைகளும், கள்ளர்களும், கடனாளிகளுமா நமக்காசாரியராக வருதல் வேண்டும்? இவர்களுக்கா வரிகளைக்கொடுப்பது?

ஆசாரியன் இயல்பைப்பற்றிப் பூனமேடு திருவாளர் P. S. வேணுகோபால் நாயுடு அவர்கள் ஓர் கதை கூறுவர்:— ஒரு பார்ப்பானுக்கு நான்கு புதல்வர் இருந்தனர். அவர்களில் மூவர் கல்வி பயின்றனர். ஒருவன் கல்விகற்காமல் சுற்றித் திரிந்தனன். அப்புதல்வனை அய்யங்கார் அடிக்கச்சென்றனன். அதனைத்தடுத்து அம்மங்கார் "புதல்வன் படித்தால் வித்வான் ஆகின்றான்; படியாவிட்டால் ஆசாரிய புருஷன் ஆகின்றான்" எனத்தடுத்தனளாம். இக்கதைக்கிலக்காகவே இப்பொழுதுள்ள ஆசாரிய புருஷர்

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

# நம் தீக்காலம்.

## தலைவர் ஓ. தணிகாசலம் செட்டியாரின் தடுமாற்றம்.

(திருசிரபுரம் ராமதாசன்.)

இக்காலத்தில் பலவிதத்தில் நமக்கு பார்ப்பனர்கள் எல்லோரும் கூடியிருந்தே கெடுப்பவர்களாக ஏற்பட்டிருக்கின்றனர், அதற்கு அவர்களைவிட நம் தீக்காலம்தான் நமக்கு கேட்டைத்தரக் காரணமாக இருக்கிறது. காலத்துக்குத் தக்கவாறு பல மாறுதல்கள் ஏற்படுகிறது. கட்டுப்பாடும் உண்டாகிறது. அப்படி முன்னும் ஏற்பட்டது. நாள் ஆக ஆக நோக்கம் மாறிப்போய் கேட்டில் வந்து முடிகிறது. காலத்தினால்தான், கல்வி, அறிவு, ஒழுக்கம், உள்ளவர்கள் அந்தணராக வேண்டியிருக்க அது ஒரு குலத்தினருக்கே ஆகிவிட்டது. அவ்வாறேதான் தருமமும், ஏழை, இல்லாதவர்களுக்கு ஏற்பட்டவை இருந்துண்பவர்களுக்குப் பயன்படுகிறது. ஆதீனங்களும், மடங்களும், கோயில்களும், சத்திரங்களும், அப்படியே கெட்டிருக்கின்றன. கடவுள் தன்மையையும், மக்கள் நிலைமையையும் பற்றி மாறுகொள்ளும் இருசாராரும், தம் அறிவைப் பெருக்கிப்போனால், ஒரே முடிவுக்குத்தான் வருவார்கள். ஒரு பகுதியினர் பழமை பாராட்டலாம். மறுபிரிவினர் காலநிலைமையைக் கருதலாம்.

ஆகையினால் எந்தப் பார்ப்பானுவது நமக்குப் பகைவனல்ல, நாம் அவர்களை வெறுக்கவோ, பகைக்கவோ, அவர்களிடம் இருக்கும் அன்பைக் குறைக்கவோ, தீங்கு செய்யவோ, திட்டவோ வேண்டியதில்லை.

இப்பொழுது நாம் நமது தற்கால நிலைமையையும், முற்கால வியல்பையுந் தெரிந்துகொண்டு, நம் கேட்டிற்கு எவை எவை ஏதுவாயிருந்தன என்பதைத் தெரிந்துகொண்டு தீமையினின்றும் நம்மை நாம் விடுவித்துக்கொள்ளவும் முற்பட வேண்டும். நமது குடிவாழ்க்கையில் பார்ப்பனர்களால் நமக்கு கேடு நிறைந்திருக்கிறதென்று தெரியவருமாயின் அவர்களை அக்கேட்டில் புகவிடாதபடி நம்மை நாம் காத்துக்கொள்ள வேண்டும். அங்ஙனம் செய்தால் அவர்கள் தாமே அகன்றுவிடுவர். இறந்த திதிக்கும், கலியாணத்துக்கும், அவர்கள் வேண்டாமென்று தடுத்துவிடுதல் நம் கடமை. இவைகளை முற்றுமுணர்ந்து, இக்கொள்கையை முற்றுமுணர்ந்து, இக்கொள்கையை உலகமெங்கும் பரப்புவதற்கு தகுதியுடைய ஒரு தலைமைமனிதரே தனது கொள்கைக்கு நேர்விரோதமாக நடப்பதாக இருந்தால் இதை யாரிடத்தில் போய் முறையிடுவது. தாயே விபசாரியானால் மக்களின் கெதி யாது? "நான் செய்வதைச் செய்யாதே" "நான் சொல்லுவதைச் செய்" என்ற விபரீதத் தத்துவமுடைய நமது செட்டியாரவர்கள் இனியேனும் ஆரியப்பூண்டை அடியோடொழிப்பாராக! சுயமரியாதை ஓங்குக.

# இந்தியாவுக்கு விடுதலை!

## எப்போது? — எவ்வழியில்?

இந்தியா விடுதலை பெறுவதற்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்து உழைக்கும் உலகம்போற்றும் தேசாபிமானி உயர்திரு மகாத்மா காந்தியடிகளும், இத்தலைவரை தங்கள் மாயவலையில் சிக்கவைத்துக் கொண்டிருக்கும் பார்ப்பன தேசாபிமானிகளெனப்படுபவர்களும், இன்னும் உண்மைத் தேசாபிமானிகளும், இந்துமுஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டால் சுயராஜ்யம் அடையக்கூடும் என்ற கருத்தை ஒப்புக்கொண்டவர்களாய், பரந்த நோக்கத்துடன் இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்படுத்த பகீரதப் பிரயத்னம் செய்து கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. இதைக் கொண்டு நாம் யூகிக்க வேண்டிய கருத்தொன்றுளது.

யாதெனில் இந்துமுஸ்லீம் என்றதில், இந்து என்றும் முஸ்லீம் என்றும் இரண்டு பிரிவுகள் உள்ளன. இவற்றுள் புராணப் புரட்டுகளின் படியும், பார்ப்பனீய மூடக்கொள்கைகளின் படியும், "பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்" என்னும் அகாரணமாக நியாயமற்ற வழியில் பிரிக்கப்பட்ட பிரிவுகளின் மூலமாய், "உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, தீண்டக்கூடியவர், தீண்டக்கூடாதவர்" என்னும் உயர்வு தாழ்வு ஏற்பட்டு சமூக சமத்துவம் பாராட்டாமல் இருக்கும் இத்தகைய "பிராமணர் பிராமணரல்லாதார்" போராட்டமுள்ள இந்து என்னும் மதமானது எப்படி முஸ்லீம் என்ற மதத்துடன் சகோதரத்துவம் பாராட்டி ஒற்றுமைப்படும் என்பதை யோசித்து முடிவுசெய்யவும், இத்தகைய முயற்சியால் நாம் என்ன பயன் அடையக்கூடும் என்பதை யோசிக்கவும், இதைக் கண்ணுறும் அறிவாளிகளுக்கே விட்டுவிட விரும்புகிறேன். நிற்க

நமது தலைவர் நாயக்கர் அவர்கள் இரண்டு வருஷ காலமாக பிராமணரல்லாதார் சுயமரியாதையடைய வேண்டுமென்ற உணர்ச்சியுடன் பிராமணீயத்தை எதிர்த்துப் போராடி அரும் பெரும் தேசத்தொண்டு செய்துவருவதை, உலகம் புகழும் மகாத்மா அவர்கள் உண்மையாகவே அறிந்திருந்தும், நாயக்கர் அவர்களின் கொள்கையை ஆதரித்தோ, எவ்விதமாகவோ, ஒரு வார்த்தையேனும் சொல்லாமலும், ஒன்றும் அறியாதவர் போல மௌனமாய் இருப்பதற்கு என்ன காரணம். சென்ற மாதத்தில் மகாத்மா அவர்கள் சென்னையில் ஓர் பிரசங்க மேடையில் 'பிராமணர்களைப் போற்றுகிறேன்' என்று சொன்னதையும் கேள்விப்பட்டு யோசிக்குங்கால், 'பிராமணரல்லாதாரை படுகுழியில் அழுத்தப் பிரயத்னப் பட்டுக் கொண்டிருக்கும் சுயநலப் புலிகளாகிய பார்ப்பான்களின் மாயவலையில் சிக்குண்டு மயக்கப்பட்டிருப்பதினால், மகாத்மா அவர்கள் பார்ப்பான்களின் தப்புத் தாளங்களுக்குத் தக்கபடி பார்ப்பனீயப் பிரசாரப் பாட்டுப்பாடும் பக்குவத்தை அடைந்திருக்கிறார்' என்று சிற்றறிவாளரும் ஆச்சரியத்துடன் அறியலாம்.

பார்ப்பனர்களின் சூழ்ச்சியானது நம் அரும பெருந்தலைவரையே அடக்கிவைத்துக் கொண்டிருக்கிறதென்றால், இன்னும் யாரைத்தான், எதைத்தான் என்ன என்ன செய்யாதென்பதையும் யோசிக்க வேண்டுகிறேன்.

இனிமேலும் பார்ப்பன சூழ்ச்சியினின்றும் விலகவும், சுயமரியாதைக் கிளர்ச்சியை ஆதரித்து இந்தியாவின் விடுதலைக்கு முயற்சிக்கவும், கடவுள் மகாத்மா அவர்களுக்கு அருள் புரிவார் என்ற மனப்பூர்த்தியான எதிர்நோக்கத்துடன் கடவுளை வணங்குவோமாக.

இந்து என்ற மதத்திலுள்ள பிராமணரல்லாதார் சுயமரியாதையடைந்து, சமூகசமத்துவம் ஏற்பட்டு, பின்னால் முஸ்லீம் சகோதரர்களுடன் ஒற்றுமை ஏற்படுத்தினால் இந்தியா எளிதில் விடுதலையடையுமேயன்றி மற்றக் கட்சிகளாலும், பிரயத்தனங்களாலும் அடையுமென்பது சந்தேகத்திற்கிடமானதென்பதே முடிவான அபிப்பிராயமாகும்.

அ. சித்தப்ப செட்டி, இராசிபுரம்.

# ஒன்பது நாட்டவருக்கோர் விண்ணப்பம்.

பட்டுக்கோட்டை தாலூகாவிலுள்ள ஒன்பது நாட்டுக் குலமக்களே! பார்ப்பனக்கொடுமைகள் நாட்டில் மிகுதியும் தலைவிரித்தாடும் இக்காலத்தில் ஆங்காங்கு சமூக முன்னேற்ற சங்கங்களும் சுயமரியாதைச் சங்கங்களும் கண்டு ஒவ்வொரு சமூகமும் முன்னேற்றமடைந்துவருகிறது. நமது சமூகமோ மதத்தின் பேராலும சமயத்தின் பெயராலும் பாழும் பார்ப்பனீயத்திற்கு அடிமைப்பட்டு, தென்னமரத்தில் இடிவிழுந்தால் பிராயச்சித்தம செய்வதும், தேங்காய்யாகம் செய்யப்போகிறேன என்று ஒரு பார்ப்பனன் வந்தால் ஆயிரக்கணக்கான தேங்காய்களை அளளிக்கொடுப்பதும், இன்னும்பல அர்த்தமற்ற சடங்குகளைச் செய்வதும் வழக்கமாய் விட்டது. இனியேனும் சமூக விடுதலை பெற்றுச் சுகமானவழியில், வீண்செலவைக் குறைத்துச் செட்டான முறையில் வாழ வேண்டுமானால் அர்த்தமற்ற பார்ப்பனச் சடங்குகள் அனைத்தையும் ஒழிப்பதற்கு நமது குலஇளைஞர்கள் தமது சொந்த மதிகொண்டு முன்னணியில் நின்று ஊழியம் புரியவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்: பார்ப்பனீயம் வீழ்க. சுயமரியாதை வாழ்க.

இங்ஙனம் சமூக முன்னேற்றம் நாடும

குப்புசாமி.

சூத்திரன் என்று உன்னைச் சொல்லிக் கொள்ளாதே.

சூத்திரன் என்றால் "வேசி மகன் என்று பொருள்.

சங்கீதம்

## கோயம்புத்தூரில் சங்கீத சபை.

—:O:—

கோயம்புத்தூரில் சாஸ்வதிகான சபா என்பதாக ஒரு சபை சமீபத்தில் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. இதற்கு போஷகர்கள்.—

ஸ்ரீமான்கள்

1 எம். ஆர். காளிங்கராயர், ஊத்துக்குளி ஜமீன்தார்

2 எம். சம்பந்த முதலியார் B. A. B. L. ஐகோர்ட் வக்கீல்

3 ஈ. வெ. இராமசாமி நாயக்கர் ஈரோடு.

அபிமானிகள்:—

வித்துவான்களான ஸ்ரீமான்கள்

1 காஞ்சிபுரம் சி. சுப்பிரமணிய பிள்ளை

2 திருச்சி கோவிந்தசாமி பிள்ளை

3 புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை

4 மதுரை எம். கே. எம். பொன்னுசாமி பிள்ளை

தலைவர்:—

ராவ்பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் முனிசிபல் சேர்மென் & ஜில்லா போர்டு பிரசிடெண்ட், எம். எல். சி.

உப தலைவர்:—

ஸ்ரீமான் ஷண்முகம் செட்டியார் B. A. B.L. M. L. A. கோயமுத்தூர்

காரியதரிசிகள்:—

1 ஸ்ரீமான்கள் வி. அருணாசலம் செட்டியார் முனிசிபல் வைஸ் சேர்மென்

2 சி. வி. வி. சுப்பைய செட்டியார் முனிசிபல் கவுன்சிலர்

3 ஏ. ஆர். சிவானந்த முதலியார்

பொக்கிஷதார்:—

ஸ்ரீமான் வி. பழனிசாமி நாயுடு, இந்தியன் கம்மர்ஷியல் பாங்கு செகரிடெரி

இச்சபையின் உண்மையான நோக்கம்.

தற்காலம் நமது நாட்டில் எல்லா விஷயங்களிலும் பார்ப்பன ஆதிக்கம் தலை நிமிர்ந்திருப்பது போல் சங்கீதத்திலும் பார்ப்பன ஆதிக்கமே தலை சிறந்து விளங்குகிறது. இதன் பலனாய் பார்ப்பனரல்லாத சங்கீத வித்துவான்கள் முன் வருவதற்கில்லாமலும், அவர்கள் பார்ப்பனர்களை விட எவ்வளவு விசேஷ ஞானமுடையவர்களாயிருந்தாலும் அவர்களை அழுத்தி தலையெடுப்பதற்கில்லாமல் செய்து கொடுமைப்படுத்தி வருவதாலும், நமது பிரபுக்கள் என்பவர்களும் இசைஞானத்தைப் பற்றி கொஞ்சமும் கவனிக்காமலும், பார்ப்பனரல்லாத வித்துவான்கள் என்கிற அபிமானமில்லாமலும், பார்ப்பனர்களையே ஆதரிப்பதும், பார்ப்பனரல்லாத வித்துவான்களைக் கண்டால் அலட்சியமாய் கருதி நீ தான் என்று ஒருமையில் பேசுவதும், அவ்வித்துவான்கள் தங்களைக் காணும் போது மேல்வேட்டியை எடுப்பதில்லை, எழுந்து குனிந்து கும்பிடு போடுவதில்லை யென்று கோபித்துக்கொள்ளுவதும், பார்ப்பன வித்துவான்கள் என்கிற முறையில் ஒரு தற்குறியைப் பார்த்தாலும் வாருங்கள் சுவாமிகளே என்று எழுந்து கும்பிடுவதும், அனியாயமான மரியாதை செய்வதும், சன்மான விஷயத்திலும், மிகவும் வித்தியாசமாய் நடந்து கொள்ளுவதும், சபைகளில் பார்ப்பனரல்லாத வித்துவான்கள் பாடும்போதோ, வாசிக்கும்போதோ அதைப் பாராட்டாமலும், அவர்களுக்கு சந்தோஷம் குஷால் புதியவைகள் உண்டாக்கத்தக்க பெருமைகள் செய்யாமல் அவமானம் செய்வதும், பார்ப்பனர்கள் பாடவோ, வாசிக்கவோ செய்யும் போது கழுத்தொடிந்து போகும் படி தலையாட்டுவதும், சபாஷ் என்பதும், கை தட்டுவதும், மாலை போடுவதுமான காரியங்களை எல்லாம் திருத்தவும் சங்கீத உயர்வின் உண்மையை அறியவும், அதிலும் பார்ப்பனரல்லாதாரை விசேஷமாக ஆதரிக்கவும், ஒவ்வொரு பார்ப்பனரல்லாத பிரபுக்களும் தங்கள் வீட்டு விசேஷங்களுக்கு கண்டிப்பாய் பார்ப்பனரல்லாத வித்துவான்களை ஆதரிக்கச் செய்வதுமான காரியங்களை விண்ணப்ப மூலமாயும் பிரசார மூலமாயும் செய்வதையே கருத்தாகக்கொள்ளும்.

அன்றியும், பார்ப்பனரல்லாத வித்வான்கள் பாடுவதை பார்ப்பன பிரபுக்களும் வைதிக பார்ப்பனர்களும் காதினால் கேட்பதையே பெரிய தோஷமாகக் கருதி அவர்களை அலக்ஷியம் செய்வதும், அக்கலையை பார்ப்பனர்களுக்கே உரிமையாக்குவதுடன் தமிழ் மக்களுக்கு சங்கீதம் அதாவது இசைஞானம் என்பதே இல்லையென்று சொல்லுவதுமான கொடுமைகளையும் தப்பபிப்பிராயங்களையும் ஒழிப்பதையும் முக்கியமாகக் கொண்டிருக்கும். ஆதலால் இக்கருணம் ஈடேறும்படி செய்ய தமிழ்மக்கள் யாவரும் உதவி செய்யவேண்டும். எப்படியெனில் ஒவ்வொரு ஊரிலும் இம்மாதிரி கருத்துடனேயே சங்கீதசபைகள் ஏற்படுத்துவதும், ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாத சங்கீத வித்வான்களை ஆதரிப்பதும், ஆங்காங்குள்ள பிரபுக்களை ஆதரிக்கச் செய்வதும், பார்ப்பனரல்லாத வித்வான்களுக்குத் தக்க மரியாதையும் கௌரவமும் கொடுத்து சமத்துவமாய் நடத்துவதுமான காரியங்களைச் செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நமது பிரபுக்களுக்கு இம்மாதிரி விஷயங்கள் இப்போது வரவர குறைந்துவருகிறதை நாம் நேரிலேயே பார்க்கிறோம், என்னவெனில் ஒரு பிரபு ஒரு தாசிவீட்டுக்கு ஒரு பார்ப்பனரை தூது அனுப்புவதானாலும் மரியாதையாக சுவாமீ என்று கூப்பிட்டு "இக்கடிதத்தை குஞ்சாளிடம் கொடுத்துவிட்டு வாருங்கள்" என்று சொல்லுவதுடன் பதில் காகிதம் வாங்கும்போதும் எழுந்து நின்று இரண்டுகையால் வாங்குகிறார்கள். இம்மாதிரி தூதுகாரர் சமையல்காரர் முதலிய பார்ப்பனர்களுக்கே மரியாதை பண்ணும் பிரபுக்கள் மற்ற பார்ப்பனர்களுக்கு மரியாதை செய்வதில் ஆச்சரியப்பட நியாயமில்லை. நாடு திருத்தமடைந்து சுயமரியாதை பெறவேண்டுமானால், மதிக்கப்படுவது இன்னது மதிக்கப்படாதது இன்னது என்கிற பகுத்தறிவு நமது பிரபுக்களுக்கு உண்டாகவேண்டும். அது ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு வகுப்பிலும் உண்டாகிக்கொண்டு வரவேண்டும். அப்படிக்கில்லாமல், வெறும் சுயமரியாதையைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதில் எவ்வித பலனும் உண்டாகாது நாம் அதை ஏன் சொல்லுகிறோம் என்றால் காரணமில்லாமல் அல்ல. உதாரணமாக செட்டிநாட்டில் ஒருநாளைக்கு அதாவது மூன்று மணி நேரத்திற்கு 300 ரூபாயும் 2-வது வகுப்பு பிரயாணப்படியும் பேசித் தருவிக்க ஒரு பார்ப்பனரல்லாத சங்கீத வித்வான் வேர்வையைத் துடைத்துக்கொள்ள ஒரு சிறு முகம் துடைக்கும் துணியை தோளில் போட்டுக்கொண்டு வாசித்ததற்காக அவரைக் கேவலப்படுத்தி அத்துணியை எடுத்துவிட்டுத்தான் வாசிக்க வேண்டுமென்று சட்டாயப் படுத்தினார்கள். எனவே நமது பணம்படைத்த பிரபுக்களின் அறிவின் பெருமையைப் பற்றி நாம் என்னவென்று சொல்லுவது. அல்லாமலும் அதைத் தடுத்து தங்களது சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளத்தக்க யோக்கியதை நமது பார்ப்பனரல்லாத வித்வான்களுக்கும் ஏற்பட வேண்டும். அதையும் இம்மாதிரி சபைகள் மேற் போட்டுக்கொண்டு நமது சமூகத்திற்கும் இசை ஞானத்திற்கும்தான் மதிப்பு ஏற்படுத்திக் கொடுப்பார்களாக இக்கருத்துகளை பெருநாளாகக் கவனித்தே இப்போது இச்சபை ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

---

### மத நிலயங்களும் அவைகளின் பாதுகாப்பும்

நமது நாட்டில் வெகுகாலம் தொட்டு கணக்கற்ற மதநிலயங்கள் ஆங்காங்கு பழுதடைந்து மிக்க ஜீரணஸ்திதியிலிருக்கக் காணுகிறோம், சில மதநிலயங்களை நமது ஆரியதன வைசிய சிகாமணிகள் ஆயிரம் பதினாயிரம், இலட்சக்கணக்காய் செலவிட்டு புதுப்பித்திருக்கிறார்கள். அது ஒருபுறமிருக்க மற்ற மதநிலயங்களில் தருமகர்த்தாக்களின் கவனிப்பின்மையால் கட்டிடத்தின மீதும் மதில்கள் மீதும் செடி கொடி மரங்கள் வளர்ந்து அவ்வப்போது வேருடன் களையாது விட்டு மரமாகி கட்டிடத்தை தள்ளும் நிலைக்குக் கொண்டுவந்திருப்பது மன்றி வேர்கள் கட்டிடங்கள் பலவற்றைத் தள்ளியுமிருக்கக் கண்டிருக்கிறோம். இது விஷயமாக அரசாங்க விவசாய ரசாயன சாஸ்திரிகள் கீழ்கண்ட முறையை அனுசரித்தால் அவைகளைத் தடுக்கலாமென்று கூறுகின்றார்கள். அதாவது மரத்தின் வேர்கள் பலவற்றில் துவாரமிட்டு அதனுள் ரசத்தையாவது (Mercury) பாஷாணத்தையாவது (Sodium Arsenate) நிறைத்து மெழுகினால் அடைத்து விட்டால் விரைவில் செடிகளும் மரங்களும் பட்டுப்போகுமென்பது. இந்தமத நிலயங்கள் இப்போதிருக்கும் தன்மையில், இன்னும் புதியவைகளைப் பெருமுயற்சி செய்து கட்டுவதைவிட, ஏற்கனவே இருப்பவைகளைக்காப்பதே பெரும் நன்மையாகும். J. M. சோமசுந்தரம் B. A., B.L.,

கோயமுத்தூர், சேலம், நீலகிரி ஜில்லா தேவஸ்தான போர்டு இன்ஸ்பெக்டர்.

## கும்பகோணத்தில் நடைபெற்ற நாடார் மஹாஜன சங்க 11-வது மகாநாட்டில்

ஸ்ரீமான் நாயக்கரின் சொற்பொழிவுச் சுருக்கம் வருமாறு:— இம்மாதிரியான வகுப்பு மகா நாடுகள் நமது நாட்டில் நடந்து வருவது நாட்டின் முற்போக்குக்கு ஏற்றதா இல்லையா என்பது கேள்வி. பலர் இது கெடுதல் எனச் சொல்லுகிறார்கள். எனினும் வகுப்பு மகாநாடு அல்லாத (வகுப்புவாத மல்லாத) மகாநாடுகளே இந்நாட்டில் இல்லை என்பதே எனது அபிப்பிராயம். ஒவ்வொரு வகுப்பாரும் தங்களுடைய உரிமைகளைக் கேட்கவே மகாநாடுகள் நடத்துகிறார்கள். மற்றொரு வகுப்பார் தலையெடுக்காமல் அடிக்கவும், மற்ற வகுப்பார் உரிமைகள் பெறுமலிருக்கவுமே பலர் பல மகாநாடுகளை நடத்துகிறார்கள். ஆனால் நமது நாடார் மஹாநாடோ அப்படியல்ல. பிறருக்கு கெடுதல் செய்யாமல் நாடார் மஹாஜனங்களின் நன்மையை நாடியும், உரிமைகளைப் பெறவுமே இம் மகாநாடு நடைபெறுகின்றது. வகுப்பு மஹாநாடுகளும், வகுப்பு வாதங்களும் மேல் ஜாதியாராலும் அவர்களுடைய கொடுமைகளாலும் தான் ஏற்பட்டவை. துவேஷத்தை உண்டாக்க நாம மஹாநாடுகள் கூட்டுவதில்லை. துவேஷம் வேண்டாம், எல்லோரும் சமம் என்று சொல்லுங்கள் என்று சொல்லவே நாம் இம்மகாநாடு கூட்டியிருக்கிறோம். நம் நாட்டில் அடிக்கடி சொல்லப்பட்டுவரும் "ஒற்றுமை" என்ற வார்த்தைகளும், பிரசங்கங்களும் வெளி வேஷமே. தங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய நிலைமை ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட பின்னரே உண்மை ஒற்றுமை ஏற்படும். ஒருவருக்கொருவர் ஒற்றுமையும், நம்பிக்கையும் ஏற்பட வேண்டியது அவசியம். அதற்கான வேலைகளைச் செய்ய சுதந்திரம் ஒவ்வொரு சமூகத்துக்கும் இருக்கவேண்டும். ஒவ்வொரு வகுப்புக்கும் சுயமரியாதை, சமத்துவம், சுயமதிப்பு ஏற்படவேண்டும். அதன் மூலந்தான் தேசமுன்னேற்றமடையும். உண்மையான தேசீயம் என்பது சுயமரியாதை ஒன்றே. சுயமரியாதையைப் பொறுத்தேதான சுயராஜ்ஜியமிருக்கிறது. சகலரும் ஒன்று. மேலோர், கீழோர் என்ற உணர்ச்சி இருக்கவே கூடாது என்றும் பேசினார்.

### தலைவர்

### ஸ்ரீமான் R. K. ஷண்முகம் செட்டியார் அவர்களது முடிவுரைச் சுருக்கம்.

நாடார் மகாஜன சங்கம் பலவருடங்களுக்கு முன் ராவ்பகதூர் ரத்தினசாமி நாடாரால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், அது செய்து வரும் நல்லவேலையைக் கண்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும் மகாத்மா காந்தி தென்னாட்டிலிருக்கும் பிராமணர் பிராமணரல்லாதார் இயக்கம் தனக்கு விளங்கவில்லையென்று சொல்லி வருவதாகவும், தானும் ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கரும், டாக்டர் வரதராஜுலுவும் அவருக்கு இந்த இயக்கத்தைப் பற்றி எடுத்துச்சொல்லியும், மகாத்மாவுக்கு குருகுல விஷயம் தெரிந்தும் கூட அவர் தனக்கு அவ்வியக்கம் விளங்கவில்லை என்று சொல்லுகிறார். நாம் வெகு காலமாய் சிலருக்கு அடிமைப்பட்டு வந்தோம். இப்பொழுது சுயமரியாதை எண்ணம் ஏற்பட்டிருப்பது தான் இந்த இயக்கம். ஹிந்து முஸ்லிம் இயக்கத்தை தெரிந்து கொண்ட மகாத்மா இந்த இயக்கத்தை தெரிந்துகொள்ளவில்லை என்கிறார். சுயமரியாதை இயக்கம் நமக்குள்ளாக உண்டாக வேண்டுமேயொழிய மற்றொருவரும் நம்மில் மூட்ட முடியாது. இப்படியிருக்க, மகாத்மாஜி வருணாசிரம தர்மத்துக்கு ஒரு புது வித அர்த்தத்தைக் கொடுத்து அதை சகலரும் ஒப்புக்கொள்ளவேணுமாய் பிரசாரமும் செய்யவாரம்பித்துவிட்டார். சுயமரியாதை இயக்கத்தில் நாம் போராடினால் நிச்சயம் நாம் சுயராஜ்யமடைவோம், என்று பேசினர்.

வந்தேமாதர சாரத்துடன் மஹா நாட்டு நடவடிக்கைகள் முடிந்தன.

### நிறைவேறிய தீர்மானச் சுருக்கம்.

1 விருதுநகர் ஸ்ரீமான் ஏ சி பொன்னப்ப நாடார் என்கிற சங்கரலிங்க நாடார் காலஞ் சென்றதைக்குறித்து துக்கப்படுவதாகவும்.

கும்பகோணம் வாலிப நாடார் சங்கத்தின் பொருளாளரும், மேற்படி சங்கம் நிறுவதற்கு முக்கிய காரணஸ்தருமான ஸ்ரீமான் கே. எஸ் இரத்தினசாமி நாடார் அவர்களின் அகால மரணத்தைக் குறித்து வருந்துவதாகவும்;

2. மாண்டேகு செம்ஸ் போர்ட் சீர்திருத்தப்படி ராஜ்ய விஷயத்தில் ஓட்டு சுதந்திரமே பிரதானமாயிருப்பதாலும், கிராமத்திலுள்ள கர்ணங்களே கிஸ்தியுள்ள ஓட்டர்களை பதிவு செய்ய வேண்டியிருப்பதாலும், வேண்டுமென்றே துவேஷங்கொண்டு அநேக நாடார் ஓட்டர்களை பதிவு செய்யாமல் விட்டிருப்பதால் அப்படி நேரவண்ணம் சர்க்கார் கவனித்துக்கொள்ள வேண்டுமென்றும்,

3. திருநெல்வேலி ஜில்லாவில் நாடார்கள் வசிக்கும் கிராமங்களுக்கு நாடார் கர்ணங்களை ஏற்படுத்தவேண்டுமென்றும்,

4. எ. போடிநாயக்கனூர், திருவாரூர் முனிசிபாலிட்டிகளில் திருமலாபுரம் ஸ்ரீமான் ஏ. சக்திவிநாயக நாடார் அவர்களையும், திருவாரூர் ஸ்ரீமான் வெ சாமிநாத நாடார் அவர்களையும் கவுன்சிலர்களாக நியமனம் செய்யவேண்டுமென்றும்,

பி தாலூகா போர்டு ஜில்லா போர்டு முனிசிபல் கவுன்சில், ஹானரரி பெஞ்சு மேஜிஸ்ட்ரேட் முதலிய ஸ்தாபனங்களில நாடார்கள் பிரதிநிதித்துவம் இருக்கும்படி செய்ய வேண்டுமாயும்,

5 நமது ஜனசமூகத்தில் ஒவ்வொருவர் வீட்டிலும் நடக்கும் சுப அசுப காரியங்களை நமது குலத்தவர்களையே கொண்டு நடத்தவேண்டுமாயும்,

6 நமது சொந்த ஆலயங்களில் நமது குலத்தவர்களையே அர்ச்சகராக நியமிக்கவேண்டுமாயும்,

7. நமது தேசத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற நமது தேசத்திலேயே உற்பத்தி செய்கிற சுத்த கதர் வஸ்திரங்களையே நம்மவர்கள் உபயோகப்படுத்த வேண்டுமாயும்,

நாடார் தொண்டர் படையின் நோக்கம் நம் ஜன சமூகத்திற்கு நன்மையுண்டாக்கத் தக்கதாயிருப்பதால் அதை ஆதரிக்கிறதாகவும்,

8. நமது சமூக விடுதலைகருதியும் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளவும் நமது குல இளைஞர்கள் சுயமரியாதை சத்தியாக்கிரக இயக்கத்தில் சமயம் நேரும்போது சேர்ந்து ஒத்துழைக்க விரும்புகிறவர்களை ஆதரிக்கிறதாகவும்,

9. நமது வகுப்பினர்களால் நடத்தப்படும் கலாசாலைகளில் கைத்தொழில் கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம் என்றும்.

10 நாடார் மகா ஜனங்களால் நடத்தப்படும் உற்சவங்களில் ஜீவபலியிடக் கூடாதெனவும்.

11 நம்மவர்களால் நடைபெற்று வரும் ஹைஸ்கூல்களில் ஏதேனுமொன்றை காலேஜ் ஆக்கவேணுமென்றும்

12 நமது நாடார் பாங்கை பொது ஜனங்கள் ஆதரித்து ஏராளமான பங்குகள் எடுக்கவேணுமாயும்,

13 நாடார் வசிக்கும் ஒவ்வொரு கிராமங்களிலும் கிளை சபைகளும் வாசகசாலைகளும் ஏற்படுத்தவேணுமாயும்

14. சென்னை கவர்ன்மெண்டாரின் கலால் சம்பந்தமான கோட்பாடானது சன்மார்க்கத்திற்கு விரோதமானதாயிருப்பதால் அதை முற்றிலும் மாற்றி லாகிரி வஸ்துக்களின் விற்பனையை நாளுக்கு நாள் குறைத்து 5 வருஷத்துக்குள் பூராவும் நிறுத்திவிட ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்ளுவதாகவும்.


15. சென்னை சட்டசபை. தாலூகா போர்டு, ஜில்லா போர்டு, முனிசிபல் கவுன்சில், பஞ்சாயத்து கோர்ட்டு, யூனியன் முதலிய ஸ்தானங்களில் அபேக்ஷகராக நமது நாடார் மகா ஜன சங்கக் கவுன்சிலரால் அங்கீகாரம் பெற்றவர்க்கும நாடாருக்கே ஓட் செய்யவேணுமாயும்.

16 மக்களுக்கு ஆண்களுக்கு 12 வயது வரையிலும், பெண்களுக்கு 10 வயது வரையிலும் கட்டாயக்கல்வியை பயிற்சி செய்து வைப்பதாக கலை என்னும் சடங்கு செய்து முடிக்கவேணுமாயும்,

17 இந்திய சட்டசபையிலும் மகாண சட்டசபையிலும் நடார் வகுப்பினர்களுக்கு பிரதியேகத்தேர்தல் மூலமாகஸ்தானங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று வரபோகும் ராயல கமிஷன் முன் எடுத்துச்சொல்ல ஓர் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்றும்,

18. வட ஜில்லாக்களில் நமது சங்கத்தின் லட்சியங்களையும் தீர்மானங்களையும் முறையே பரவச் செய்யவும் அமுலுக்குக் கொண்டுவரவும், சங்கத்தோடு ஒத்துழைக்கவும், ஓர் கமிட்டி நியமிக்கவும்,

19 நம் குலத்தவர்களை கேவலமாய் சாணார்கள் என்று பகிரங்கமாய் தங்கள் பேப்பரில் பிரசுரம் செய்த "இந்து" "சுதேசமித்திரன்" பேப்பர்களும் பகிஷ்கரிக்கப்பட வேணுமாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.



# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஷ புரட்டாசி 23-உ

## எது வீணான அவதூறு?

ஸ்ரீமான் எஸ். ராமநாதன் காரைக்குடியில் சொன்னதாகக் காணப்படும் கதர் இயக்கசம்மந்தமான விஷயங்களுக்கு பதில் அடுத்தவாரம் எழுதுவதாய் குறிப்பிட்டிருந்தோம். காரணமென்னவென்றால் அவ்வார்த்தைகள் உண்மையாய் ஸ்ரீமான் ராமநாதன் அவர்களால் வெளியிடப்பட்டது தானா என்றறிவதற்காக வேண்டியே அப்படி எழுதியிருந்தோம். ஆயினும் இதுவரை அவற்றை மறுக்கத்தக்க விஷயம் ஒன்றும் நமக்கு எட்டவில்லை. ஆதலால் அவற்றிற்கு நம்முடைய சமாதானத்தை எழுதிவிடவேண்டியவர்களாகிறோம். ஏனெனில் மக்களை ஏமாற்றி சிலர் பிழைப்பதற்காக செய்யப்படும் சூழ்ச்சிகளை நாம் கண்டிக்கப் புறப்படும்போதெல்லாம், இதுவரை நமது கண்டனத்தை கண்டிக்க வந்தவர்கள் ஒருவராவது, நாம் என்னசொன்னோம், அதற்கு அவர்கள் சொல்லுகிற பதில் என்ன என்பதைகாட்டாமல், வகுப்பு துவேஷம், வகுப்பு உணர்ச்சி, பொறாமை, குரோதம், என்கிற வார்த்தைகளைச் சொல்லி தப்பிக்கவோ, மழுப்பவோ, ஏமாற்றவோ பார்க்கிறார்களே யல்லாமல் யோக்கியப்பொருப்புடன் நடந்துகொள்பவர்களை காண்பது அரியதாய்விட்டது. அப்படிப்பட்ட சமயத்தில் ஸ்ரீமான்கள் ராமநாதன் காசிவிஸ்வநாதஞ் செட்டியார் சம்பாஷணையானது, நாம பொறாமை! வகுப்புதுவேஷம குரோதம் காரணமாக செய்து வருகிறோமா அல்லது உண்மையை மக்களுக்கு அறிவித்து பாமரமக்களை ஏமாற்றத்திலிருந்து தப்புவிக்கச் செய்து வருகிறோமா என்பதை வெளிக்காட்ட ஒரு நல்ல சந்தர்ப்பமாய் கிடைத்திருக்கிறபடியால், நாம இவ்விருவருக்கும் நன்றிசெலுத்தக்கடமைப்பட்டோம். இந்த சந்தர்ப்பத்தை விட்டுவிடவும் நமக்கு மனம் வரவில்லை. தவிர, அவற்றுள் இரண்டு அம்சம் அடங்கிக்கிடக்கின்றது ஒன்று, பொது விஷயம்; அதாவது கதர் இயக்க சம்பந்தமானது.

மற்றொன்று தனிப்பட்ட விஷயம். அதாவது ராமசாமி நாயக்கரையும் "குடி அரசை யும்" "திராவிடனையும்" தாக்குவது இவற்றுள் முதல் விஷயத்தைப்பற்றியே இப்போது இதில் சமாதானம் சொல்லுகிறோம். தனிப்பட்டதைப் பற்றி பின்னால் சொல்லுவோம் 'ஊழியனில்' கண்டசம்பாஷணையில் முக்கியமானவைகளில் சிலவற்றை இங்கு குறித்து சமாதானம் சொல்லுவோம்.

"கதர் இலாகாவில் உள்ள சிப்பந்திகளில் பிராமணர்கள் எத்தனைபேர், பிராமணரல்லாதார் எத்தனை பேர்" என்ற ஸ்ரீ காசிவிஸ்வநாத செட்டியார் கேள்விக்கு, சுமார் சரிப்குதி பிராமணர்களும் சரிபகுதி மற்றவர்களும் இருக்கலாம் என்பதாக பதில் கூறியிருக்கிறார்.

ஜனதொகையில் அதிகமாயிருக்கும்பிராமணரல்லாதார்களை அவர்கள் தொகைக்குத் தக்கபடி நியமிக்காததின் காரணம் என்ன?

இதற்கு ஸ்ரீமான் ராமநாதனின் பதில், சர்க்கா சங்கத்தின சிப்பந்திகள் நிர்வாகிகள் சம்பந்தப்பட்ட வரையில் பிராமணர்களைக் காட்டிலும் தகுதிபெற்ற கதர்வேலை செய்யும் தொண்டர்களைத்தான் வழக்கமாகவும முறையாகவும் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

பிராமணரல்லாத தொண்டர்கள் அகப்படாவிட்டால்தான் பிராமணர்களை ஏற்றுக் கொண்டு வந்திருக்கிறேன்.

இதில் முதல் கேள்விக்குப் பதில் சொன்ன விஷயத்தைப்பற்றி இது உண்மைக்கு மாறுபட்டது என்று வருத்தத்துடன் கூறுகிறோம். அதற்கு புள்ளி விபரமும் தருகிறோம் கீழ்க்கண்ட புள்ளி விபரத்தை நேயர்கள் பொறுமையுடன் கவனிக்கவேண்டும்.

கதர் இலாகாவை மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை நிர்வாகம், உற்பத்தி, விற்பனை ஆகியவைகள், இம்மூன்று பிரிவுகளிலும் உள்ள பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் கணக்கைக் குறிப்பிடுகிறோம். இக்குறிப்புகள்தான் நம்மை முதல் முதல் கதர் நிர்வாகத்தைப் பற்றி எழுதச் செய்தது. இவற்றில் ஏதாவது சிறு பிழைகள் இருந்தாலும் இருக்கலாம். அதுவும் ஏற்பட நியாயமில்லை.

(1) நிர்வாகத்தில் அதாவது ஈரோட்டில் உள்ள அகிலபாரத சர்க்கா சங்க நிர்வாக காரியஸ்தலத்தில் 16 பெயர்கள் இருக்கிறார்கள். அவர்களுள் 13 பேர் பார்ப்பனர், மூன்றே மூன்று பார்ப்பனரல்லாதார்தான் இருக்கிறார்கள்.

### அவர்களது பெயர்களும் சம்பளமும்.

பார்ப்பனர்கள் உத்தியோகம சம்பளம்

ஸ்ரீமான்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | V. சுப்பரமணியய்யர் | கணக்கர் | 45 |
| 2 | P S. சீனிவாசய்யர் | தபால் | 35 |
| 3 | ஸ்ரீகண்டய்யர் | கணக்கர் | 30 |
| 4 | அனந்தய்யர் | தபால் | 20 |
| 5. | [illegible]சய்யா | கணக்கர் | 25 |
| 6 | கேசவநாத ராவ் | கணக்கர் | 20 |
| 7. | V ராமசந்திரன் | தபால் | 25 |
| 8. | V R. ராமசாமி அய்யர் | ஸ்டோர் மானேஜர் | 30 |
| 9. | S. D. சுப்பரமணியய்யர் | குடிநூல் உதவி ஆசிரியர் | 25 or 30 |
| 10 | N S வரதாச்சாரி | இன்ஸ்பெக்டர் | 130 |
| 11. | பார்த்தசாரதி அய்யங்கார் | இன்ஸ்பெக்டர் | 35 |
| 12. | T. ரங்கசாமி அய்யங்கார் | இன்ஸ்பெக்டர் | 30 |
| 13. | பாஷ்க்கர அய்யர் | ஷை | 30 |

13.

### பார்ப்பனரல்லாதார்.

ஸ்ரீமான்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | W P. இக்னேஷியஸ் | மானேஜர் | 115 |
| 2. | வீராசாமி | இன்ஸ்பெக்டர் | 35 |
| 3. | ஈஸ்வரன் | இன்ஸ்பெக்டர் | 35 |

3.

கதர் இயக்கத்தில் இந்த இலாகாவானது சர்க்காரில் செக்ரெட்ரியேட் என்று சொல்லுவதற்கு சமானமான அவ்வளவு அதிகார பலமும், சூழ்ச்சிகதன்மை காட்ட சவுகரியமுமானது. எனவே இந்த ஸ்தானத்தில் 16-க்கு 13 பார்ப்பனர்களும் மூன்றே மூன்றுபார்ப்பனரல்லதாரும் இருந்தால் இது ஸ்ரீமான் ராமநாதன் சொல்லுகிறபடி 'சுமார் சரிபகுதியா' என்பதை யோசிப்பதுடன் இந்தப் பார்ப்பனக் கணக்கர், காஸ்பான்டெண்ட் என்னும தபால் இலாக்காகாரர், இனிஸ்பெக்டர்கள், ஆகியவர்களிடம்பார்ப்பனரல்லாத சிப்பந்திகள் எவ்வளவு பாடுபடுவார்கள் என்பதையும், அவர்கள் எவ்வளவு தூரம் தங்களது சுயமரியாதையை விற்றுப் பிழைக்கச் சம்மதமிருப்பதால் மாத்திரம் இந்த லாகாவிற்கு வர சம்மதிப்பார்கள் என்பதையும், நேயர்கள்யோசித்துப்பார்க்க விரும்புகிறோம்.

இரண்டாவதான உற்பத்திலாகாவில், உற்பத்திலாகா நிர்வாக காரியாலயம உற்பத்திலாகா கீழ்ப்பட்ட காரியாலயங்கள் என இருவகைப்படுத்தலாம்.

(2) இவற்றுள் உற்பத்திலாகா நிர்வாக காரியாலயம் என்பது திருப்பூரில் உள்ளது. இந்த காரியாலயத்தில் ஒட்டு மொத்தம் 10 உத்தியோகஸ்தர்கள். அவர்களில் 8பேர் பார்ப்பனர். 2 பேர் பார்ப்பனரல்லாதார் அதாவது:—

### பார்ப்பனர்.

ஸ்ரீமான்கள். ரூ.

| | | | |
|---|---|---|---|
| 1. | திருநாராயணய்யங்கார் | மானேஜர் | 75 |
| 2. | ஆர். வி. சர்மா | சாயமானேஜர் | 50 |
| 3. | என். ராமய்யங்கார் | கணக்கர் | 40 |
| 4 | சாமிநாதய்யர் | நூல் இலாகா | 30 |
| 5. | பத்மநாப ராவ் | தபால் இலாகா | 30 |
| 6. | என். எஸ். சுப்பிரமணியய்யர் | ஸ்டாக் இலாகா | 30 |
| 7. | என். எஸ். கலியாணசுந்திரம் அய்யர் | ஸ்டாக் இலாகா | 25 |
| 8. | ராமய்யர் | ஷை | தெரியாது |

### பார்ப்பனரல்லாதார்.

ஸ்ரீமான்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நாராயணசாமி | பொக்கிஷதார் | 45 |
| 2. | பஞ்சரத்தினம் | சாய இலாகா | 30 |

இந்த மானேஜர் கடின வருணாசிரமக் காரரும் கொடிய ஆசாரக்காரருமாவர். இவருக்குத் தீண்டாமை மாத்திரமல்ல பார்க்காமையும் உண்டு. இவரைப்பற்றி முன்னமே எழுதி இருந்தோம். அவரும் ஒப்புக்கொண்டு ராஜிநாமா கொடுத்தார் ஆனால் கதர் இலாக்காத் தலைவர் ஸ்ரீமான் எஸ். ராமநாதன் அவர்கள் "இந்தகாரணத்திற்காக ராஜிநாமா கொடுத்தால் கதர் இலாக்காவின் மீது குற்றம் சொன்னவர்கள் வெற்றி யடைந்தவர்களாகிவிடுவார்கள், ஆதலால் போகக்கூடாது" என்று கேட்டுக்கொண்டு, வருணாசிரமத்திற்கும் தீண்டாமைக்கும் பார்க்காமைக்கும் ஆசாரத்திற்கும், கதர் இலாக்காவுக்கும் சம்பந்தமில்லை என்பதாக தீர்ப்புக்கூறி மறுபடியும் அவரை இழுத்து வைத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் மகாத்மா பணம் வசூல் செய்வதற்காக செய்யும் பிரசங்கத்தில் தீண்டாமைக்கும் கதருக்கும் சம்பந்தமுண்டு என்று சொல்லிபணம் வசூலிக்கிறார் இது வேறு விஷயமானதால் இதை இவ்வளவுடன் விட்டு விடுவோம். இம்மாதிரியான ஒரு பார்ப்பன அக்கிராரத்தின் கீழ் எப்பேர்ப்பட்ட பார்ப்பனரல்லாதாராயிருந்தால் வேலை பார்க்க முடியும் என்பதை நேயர்களே யோசித்துப்பார்த்துக் கொள்ள வேண்டியது. இனி உற்பத்தி இலாகா கீழ்த்தர காரியாலயங்களைப்பற்றி கவனிப்போம்.

2 b) இந்த இலாக்காவில் இருபது சிப்பந்திகள் இருக்கிறார்கள் இவர்களில் 10 பேர்கள் தான் பார்ப்பனர்கள். 10 பேர் பார்ப்பனரல்லாதார். ஏன் இதில் சரி சமமாக இருக்கிறது என்பதற்கு ஒரு சமாதானம் வேண்டியிருக்கும். அதையும் வெளியிடுகிறோம். அதாவது இந்த வேலை மிகக் கடினமானது. எப்படியெனில் இந்த காரியாலயங்கள் ஏறக்குறைய பெரும் பகுதி கிராமம். ரயிலுக்கு 30, 40, 50 மைல் தூரமுள்ளது. வண்டி சவுகரியங்கள் கஷ்டமானது. தன் கையாலேயே பொங்கி சாப்பிட வேண்டியது. வேலை கடினமானது. அதாவது பஞ்சு கொடுக்கவும் நூல் வாங்கவும் நூல் கொடுக்கவும், துணி வாங்கவும், கணக்கு எழுதவும், ஆன வேலையோடு பார்ப்பனர்கள் சில இடங்களில் இருக்கவும் முடியாது. எல்லாவற்றையும்விட கொஞ்சம் பணப்பொறுப்பும் வேண்டும் எனவே இதில் சரி பகுதி இருக்க நேர்ந்ததே அல்லாமல் வகுப்பு பார்த்து உத்தியோகம் கொடுத்ததாலல்ல வென்றே சொல்லுவோம். ஆதலால் இதில் பெயர் சம்பளம் குறிக்கவில்லை.

(3) விற்பனை இலாகா தமிழ் நாட்டில் 15 இடங்களில் கதர் கடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒட்டுமொத்தச் சிப்பந்திகளில் 11 பார்ப்பனரல்லாதாரும் 10 பார்ப்பனர்களும் இருக்கிறார்கள். இதிலும், பார்ப்பனரல்லாதார் அதிகமாயிருப்பதற்குக் காரணம் இதுவும் உற்பத்தி இலாகாபோலவே சற்று கஷ்டமான வேலை. ஏனெனில் சரக்கு விற்பனை செய்ய வேண்டும், கடையில் காத்திருக்கவேண்டும், டிபாசிட்டு கட்டவேண்டும், பணம் பொறுப்பு வேண்டும். ஆகிய விஷயங்களால் பார்ப்பனரல்லாதார் சரி சமமாய் நியமிக்க நேர்ந்ததே தவிர பார்ப்பனரல்லாதார் என்கிற காரணத்தால் அல்ல, அன்றியும் டிப்போ மானேஜர்களில் பார்ப்பனரல்லாதாரிடமேதான் அதிகமாக டிப்பாசிட்டு வாங்கப்பட்டிருக்கின்றது.

தவிர ஸ்ரீமான் ராமநாதன் அவர்களே, "பிராமணர்களைக்காட்டிலும் தகுதி பெற்று கதர் வேலை செய்ய முன்வரும் பிராமணரல்லாத தொண்டர்களைத்தான ஏற்றுக்கொள்ளுவதை முறையாகவும் வழக்கமாகவும் வைத்துக்கொண்டிருக்கிறேன்" என்று அச்சம்பாஷணையில் சொல்லியிருக்கிறார். இதன் கருத்து என்ன? பிராமணர்களைவிட கெட்டிக்காரராய் இருக்கிற பிராமணரல்லாதாரை சேர்த்துக் கொள்ளுவேன் என்பதிலேயே பிராமணர்களைச் சேர்த்துக் கொள்ளுவது சாதாரணம் என்றும், அவனைவிட கெட்டிக்காரன் கிடைத்தால்தான் பிராமணரல்லாதாரை சேர்க்கமுடியுமென்றும் ஏன் சொல்ல வேண்டும் பிராமணரல்லாதாருக்கு மாத்திரம் அவ்வளவு கடுமையான நிபந்தனை எதற்கு. அல்லாமலும், இதுவரை கதர் போர்டில் பார்ப்பனரல்லாதாரை அதிகமாக சேர்க்காததற்கு காரணமும் பிராமணர்களை விட அதிகமான யோக்கியதை உள்ளவர் கிடைக்காததுதான் என்றுதானே ஏற்படுகிறது. இந்த அபிப்பிராயம் கொண்டிருப்பவரிடம் யோக்கியமான பார்ப்பனரல்லாதான் எப்படி வேலைசெய்ய முடியும்? பார்ப்பனரல்லாதாரைப்பற்றி சென்னையில் ஸ்ரீமான் ஓ. கந்தசாமிச்செட்டியார் பேசிய பேச்சுக்கும் ஸ்ரீமான் ராமநாதன் பேச்சுக்கும் வித்தியாசம் என்ன? இந்தக் கொள்கைப்படி பார்த்தால் ஸ்ரீமான் ராமநாதனை மாத்திரம் எப்படி கதர் இயக்கத்தில் இருக்க தகுதி உடையவர் என்று கேட்கிறோம். ஏனெனில் இவர் எல்லாப் பார்ப்பனர்களைக் காட்டிலும் அதிக தகுதி உடையவராக இருந்திருக்கவேண்டும் அந்தத் தகுதி என்ன என்பது நமக்குத் தெரியவில்லை. சர்க்கார் சொல்லும் தகுதிக்கும், பார்ப்பனர் சொல்லும் தகுதிக்கும், ஸ்ரீமான் ராமநாதன் சொல்லும் தகுதிக்கும் வித்தியாசம் என்ன என்று கேட்கிறோம்.

இதிலிருந்து, கதர் இலாக்காவைப் பற்றி, அது பார்ப்பன அக்கிராரம் என்று நாம எழுதினவைகளுக்கு ஆதாரம் இருக்கின்றதா இல்லையா என்பதையும். அதன் அதிகார ஸ்தானம் முழுவதும் பார்ப்பனர்கள் கையில் இருக்கிறதா இல்லையா என்பதையும், கவனித்துப்பாருங்கள். காரிய ஸ்தலத்தில் 100க்கு 80 பார்ப்பனர்கள், உற்பத்தி ஸ்தலத்தில் 100க்கு 80 பார்ப்பனர், இன்ஸ்பெக்ஷன் ஸ்தலத்தில் 100க்கு 66 பேர் பார்ப்பனர்கள். மற்றது கஷ்டப்படுவது மூட்டை தூக்குவது, பொறுப்பு ஏற்றுக்கொள்வது, செடிக்கு தண்ணீர் ஊற்றுவது, ஆபீசு கூட்டுவது முதலிய ஆட்கள் பார்ப்பனரல்லாதார் என்றால் இது நியாயமான சமாதானமா?

மற்றபடி, சம்பாஷணையின் மற்ற பாகங்களுக்கு அடுத்த வாரம் எழுதுகிறோம்.

---

# கோவில்.

"திராவிடன்" பத்திரிகை கோவில்களைப்பற்றி ஸ்ரீமான் சி. விஜயராகவாச்சாரியார் எழுதியதற்கு சமாதானம் எழுதுவதாவது,

ஸ்ரீமான் விஜயராகவாச்சாரியார் கடும் வர்ணாசிரம தர்மி. பிறவியில் உயர்வு தாழ்வு உண்டு என்று கருதிக்கொண்டிருக்கிறவர். எனவே அவர் மகாத்மாவைக் கண்டிப்பதில் அதிசயமில்லை. அன்றியும் இவர் கோவில்களின் மூலம் பார்ப்பனர்களின் வாழ்வு இன்னதென்று தெரிந்தவர். இந்துமதம் என்கிற பெயர் இல்லாவிட்டால் இந்நாட்டில் பார்ப்பனருக்கு எவ்வித மரியாதையும் இல்லாததோடு குணத்தைப்பற்றி மக்களை வகுப்பதின் மூலம் பார்ப்பனர்கள் தீண்டாதவர்களாகி விடக்கூடும் என்பதையும் உணர்ந்தவர் ஆதலால் இவர் தன் சமூகத்தின் வாழ்வுக்காக அப்புக் கட்டுவதில் கவலை எடுத்துக்கொள்ள வேண்டியது இவர் கடமை. ஆனால் நாம் அக்கோவில்கள் விபசார விடுதிகள் என்பதை விளக்க இதை உபயோகித்துக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

மகாத்மா காந்தி இப்போதைய கோவில்களின் நிலைமையைப் பற்றித்தான் அவ்விதம் கூறுகிறார் போல் தோன்றுகிறது ஆனால் நாம் ஆதியிலுள்ள கோவில்களைப்பற்றியும். அதிலுள்ள சுவாமிகளைப் பற்றியும், அங்கு நடக்கும் அக்கிரமங்களைப் பற்றியும், அவைகள் ஆதியில் எப்படி ஏற்பட்டது என்பதைப் பற்றியுமே கவனித்து அப்படிச் சொல்லுகிறோம் உதாரணமாக ஆரியசமாஜத் தலைவர் அதாவது வேதத்தைக்கூட ஒப்புக்கொள்ளுகிறவரான சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் எழுதியிருக்கும் சத்தியார்த்தப் பிரகாசத்தில் இவ்விஷயத்தை நன்றாய் விளக்கி இருக்கிறார். மற்றும் சைவக்கடவுளைப் பற்றி இந்துக்கள் என்று சொல்லிக்கொள்ளும் வைணவர்களையும், வைணவக்கடவுள்களைப்பற்றி அந்த இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளும் சைவர்களையும், கேட்டாலும், அல்லது அவரவர்கள் வேத சாஸ்திர புராண ஆதாரங்களைக் கொண்டு எழுதி வைத்திருக்கும் சைவமத கண்டனம், வைணவமத கண்டனம், என்னும் புஸ்தகங்களைப் பார்த்தாலும் தெரியவரும். அன்றியும் அக்கடவுள்கள் அன்னிய ஸ்திரீகளிடம் தினமும் அக்கோவில்களில் படுப்பதும், அக்கடவுளுக்கு தேவடியாட்களாக விபசாரப்பெண்கள் ஏற்படுத்தப் படுவதும், அவர்கள் சுவாமிக்குத் தொண்டு செய்வது என்னும் பேரால் தங்களை அலங்கரித்துக் கொண்டு தினமும் கோவிலுக்கு வருவதும், அவர்களைப் பார்க்க விட புருஷர்கள் பக்தியின்பேரால் சாமி கும்பிட என்று அங்கு வந்து சம்மதம் ஏற்படுத்திக் கொள்ளுவதும், இவர்களைப் பார்த்து குல ஸ்திரீகளும் அலங்கரித்துக்கொண்டு வருவதும், அவர்களைப் பார்த்து நிஜமாகவே பக்திக்காக வந்த புருஷர்களும் பக்தி கெட்டு அக்குலப் பெண்களை சுவாதீனம் செய்ய முயற்சிப்பதும், ஒருவருக்கொருவர் காதல் ஏற்பட்டு இனப்படி மூக-

தரிசனத்தாலேயே அருளிய காதல் திருப்தியை அடையக் கருதி இருவரும் பெரிய 'பக்தர்களாகி' தினமும் கோவிலுக்குப்போக ஏற்பாடு செய்து கொள்ளவதுமான காரியங்களை ஒவ்வொரு மனிதனும் ஸ்திரீயும் தங்கள் தங்களுடைய வாலிப பருவத்தை நினைத்துப் பார்த்துக் கொண்டால் இவை கண்டிப்பாய் ஞாபகத்துக்கு வரும் என்றே சொல்லுவோம். இது தவிர சுவாமி தாசி வீட்டுக்கு போதல், வேறு பெண்களை சிறையெடுத்து வருதல், வேறு பெண்கள் மீது காதல்கொண்டு மாறு வேஷம் போட்டுக் கொண்டுபோய் அப்பெண்களை கற்பழித்து விட்டு வருதல், ஆண்சாமிகளிலேயே ஒரு சாமிக்கு மற்றொரு சாமிமேல் மோகம் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் கலந்து பிள்ளை உண்டாக்குதல் முதலான இந்து மத வேத சாஸ்திர புராணங்களைக்கொண்டு கோவில்கள் கட்டி இம்மாதிரி சாமிகளை அவைகளில் வைத்திருத்தல், இம்மாதிரி நடவடிக்கைகளை உற்சவமூலம் நடத்தல் ஆகிய காரியங்கள் கோவிலின் தத்துவங்களைப்பற்றி நாமும் மகாத்மாவும் கூறுவதை நன்றாய் ருஜுச் செய்யும். அன்றியும் கோவில் யோக்கியதை இப்படியானால், உற்சவங்கள் என்பவைகள் எதற்கு உபயோகப்படுகிறது என்று பார்த்தால் அதிலும் கோவில்கள் எவ்வளவுதூரம் விபசார விருத்தி என்பது புலப்படும். மேல்சொல்லப்பட்ட மாதிரியான கருத்துக்கள் கொண்ட உற்சவத்திற்கு போகும் பெண்ணும் ஆணும் தங்களை அலங்கரித்துக்கொண்டு போவதும், ஒருவரை ஒருவர் நாடித்திரிவதும், அன்னிய ஸ்திரீகள் சிநேகமும் அன்னிய புருஷர்கள் சிநேகமும் கொண்ட ஆண் பெண்கள் கோவில்களையும் உற்சவங்களையும் சங்கேதஸ்தலங்களாக உபயோகித்துக் கொண்டு போவதும் யாவரும் அறியாமலிருக்க முடியாது. சிற்சில ஊர்களில் உற்சவகாலங்களில் கோவில்களுக்கு வெளியில் உள்ள சுற்று வீடுகளுக்கு விபசாரத்தின் பொருட்டு வாடகைகள் அதிகம் ஏற்படுத்துவதும் யாவரும் அறிந்ததே. அதாவது நகரத்தார வசதிக்கு ஆக ஏற்படுத்திக்கொள்ளப்படும் நீலகிரி கொடைக்கானல் குற்றாலம் முதலிய இடங்களில் உள்ள கட்டிடங்களுக்கு எப்படி ஒரு வருஷத்திய வாடகை இரண்டுமாதங்களுக்கு வாங்கிக்கொள்ளப் படுகிறதோ அதுபோலவே சிறு சிறு அறைக்கு ஒரு வாரத்திற்கு 10, 15 ரூ வீதம் குடிக்கூலி ஏற்படுகிறது. இந்த வாடகைகள் கோவிலுக்கு வரும் ஆண் பெண் பக்தர்களாலேயே சரிகட்டப்படுவதுடன் 100, 200 ரூ சம்பாதித்துக் கொண்டும் போகப்படுகிறது. உற்சவ காலங்களில் சுவாமி கோவில்கள் மாத்திரமல்லாமல் அர்ச்சகர்கள் வீடுகளும் சில விபசார வீடுகளாக ஆக்கப்பட்டு விடுகின்றன என்று சொல்லவேண்டியிருக்கிறது. நல்ல அழகிய பெண்ணை மணந்த அர்ச்சகர்களிடமே அதிக யாத்திரைக்காரர்கள் போய்ச் சேருகிறார்கள். அதிக கட்டளைக்காரர்களும் ஏற்படுகிறார்கள். இதன் காரணம் என்ன? கண்கூடாகத்தெரிய பல சமயங்களில் யாத்திரைக்காரர்களை தங்கள் வீட்டின் நடையில் படுக்க விட்டு விட்டு, பெண்களை கூப்பிட்டு "இன்று ராத்திரி எனக்கு கோவிலில் படுக்கை முறை, ஆதலால் காலையில் தான் வருவேன், வீதிக்கதவை ஜாக்கிரதையாக தாள் போட்டுக்கொள்" என்று சொல்லிப்போகிற அர்ச்சகர்களையும் நேரில் பார்த்தவர்கள் இருக்கிறார்கள்.

இவைகளில் எதை நமது ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் அவர்கள் மறுக்கிறார்கள் என்றும் கேட்கிறோம். இவர்களை கோவிலை விட்டுத் தள்ளுவதற்கு என்ன சட்டம் இருக்கிறது என்று கேட்கின்றோம். இவைகளை யாராவது வெளியில் எடுத்துச் சொன்னால் அவர்களைப்பற்றி ஜனங்களுக்கு சாமி, பூதம், பேய் பிசாசு, கோவில், குளம் முதலியவைகளிடம் அதிலும் பாமரமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் குருட்டு நம்பிக்கையை ஆதாரமாய் உபயோகித்துக்கொண்டு "கோவிலைக் கெடுக்கிறார்கள்" "நாஸ்திகம் பேசுகிறார்கள்" என்று தூற்றி மனதறிந்து அக்கிரமமாய்ப் பேசி பாமரமக்களை ஏமாற்றுகிறார்களே ஒழிய அவர்கள் இம்மாதிரியான அக்கிரமங்களை மறுக்க காரணம் காட்ட முடியுமா என்று மறுபடியும் கேட்கிறோம். கோவில்களில் கட்டளைகள் ஏற்படுத்துவதின் யோக்கியதைகள் அநேகமாய் என்ன என்று பாருங்கள். கட்டளைக்காரன் பணம் கொடுப்பதும் வருஷத்திற்கு மும்முறை அர்ச்சகர் வீட்டில் சாப்பிட்டு விட்டு படுத்திருந்து போவதுமல்லாமல் மற்றபடி 100-க்கு 75 கட்டளைகளின் காரியமும் கதியும் என்ன என்று கேட்கிறோம். கட்டளைக்காரனை நினைத்துக் கொண்டிருக்கிறபடி கட்டளை "பூஜை" நடக்கின்றதா "அர்ச்சனை" நடக்கின்றதா "அஷ்டோத்திர" நடக்கின்றதா "மண்டலபூசை" நடக்கின்றதா என்று கேட்கிறோம்.

கட்டளை அர்ச்சகர் எல்லாம் பணம் வசூலிக்கப் போவதும் அர்ச்சகர் வீட்டில் அவாது சம்சாரம் வீட்டுக்குத் தூரமாகி அதாவது பகிஷ்டை ஆகி வேறுவேலை இல்லாமல் இருக்கும் காலத்தில் விபூதி குங்குமம் வில்வம் மஞ்சள் காமக்கட்டி சந்தனம் துளசி இலைகளை தனித்தனி பொட்டணங்களாக கட்டி விலாசமெழுதி வைத்திருக்கும் கவர்களில் அச்சுப் போட்டுவைத்திருக்கும் காகிதத்துடன் போட்டு தபாலில் போடுவதுமல்லாமல் வேறு என்ன காரியம் நடக்கின்றது? இவர்களுக்கு பலன் என்ன என்றும் கேட்கின்றோம்! இந்த கோவில் சாமி உற்சவம் கட்டளை இவைகளுக்கு யாருடைய பணம் போகிறது? எவ்வளவு பணம் போகிறது! இவ்வளவு பணங்களும் எதற்கு உபயோகப்படுகிறது? என்று பகுத்தறிவைக் கொண்டு பார்ப்பதுடன் இதனால் சுவாமிக்காவது பக்தனுக்காவது என்ன காரியம் உண்டாகிறது என்பதையும் வாஸ்தவத்திலேயே கோவிலில் கடவுள் இருப்பாரானால் இவ்வக்கிரமங்கள் ஒரு இடத்திலாவது ஒருவராலாவது செய்ய இடம் ஏற்படுமா? என்பதையும் கவனிக்க வேண்டுகிறோம். இவைகள் தவிர கிராமக் கோவில்களில் நடக்கும் அக்கிரமங்களைப்பற்றியோவென்றால் அது சொல்லத்தொலையாது. அர்ச்சகர் குடி இருப்பு படுக்கை சாப்பாடு முதலியவைகள் கோவில்களிலேயேவைத்துக்கொண்டிருக்கிறார்கள். தூரமான பெண்களும் அங்கேயே படுக்கிறார்கள். சுவாமிபேரால் ஏற்படுத்தப்பட்ட தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் இந்த தூரமான பெண்கள் துணிகள் துவைக்கப்படுகின்றதுடன் ஸ்நானமும் செய்யப்படுகிறது. சுவாமிக்கு தீர்த்தம் முதலியவைகளும் அதிலிருந்தே எடுத்து சாமிக்கு ஸ்நானமும் சமையலும் செய்யப்படுகின்றன. இவைகளில் எதை ஸ்ரீமான் விஜயராகவாச்சாரியார் மறுக்கிறார் என்று கேட்கின்றோம், இது விஷயத்தில் மாத்திரம் எங்கும் சுவாமி இருப்பதாக ஒப்புக்கொள்ளும் ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் அவர்கள் "தீண்டாதவர்கள்" கோவிலுக்குப் போக ஏன் சம்மதிப்பதில்லை என்று கேட்கின்றோம்? சிங்கம் கரடி புலி நாய் நரி பன்றி பாம்பு தேள் பூச்சி புழு மலம் முதலியவைகள் மலிந்து கிடக்கும் மலைமேல்கூட ஏறக்கூடாது என்கிறார்களே! அது ஏன் என்று தான் கேட்கின்றோம். ஸ்ரீமான் சி. விஜயராகவாச்சாரியார் அரசியலில் எவ்வளவோ பிரதிநிதித்துவமும் பெருமையும் அடைந்திருந்த காலங்களில் இக்கொடுமைகள் நீங்க என்ன செய்தார் என்றும் என்ன தீர்மானம் கொண்டு வந்தார் என்றும் கேட்கிறோம், அன்றியும் இவ்விஷயங்கள் ஒன்றும் ஸ்ரீமான் விஜயராகவாச்சாரியாருக்கு உண்மையிலே தெரியாதா என்றும் கேட்கின்றோம். மற்றவைகளைப்பற்றி அடுத்தவியாசத்தில் ஆராய்வோம்.

---


## காங்கிரஸ்
## கத்தர் வஸ்திராலயம்.

பொது ஜனங்களின் சௌகரியத்தை உத்தேசித்து காங்கிரஸ் வஸ்திராலயம் 16-9-27 ந் தேதி முதல் பெரிய கடை வீதி 529 நெ: லக்கமிட்ட ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. கதர் அபிமானிகள் யாவரும் ஷை எங்கள் கதர் வஸ்திராலயத்திற்கே வந்து சுத்த கதர் வாங்கவேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மகாத்மா அவர்கள் வருகிற அக்டோபர் மாதம் இரண்டாவது வாரத்தில் கோவைக்கு விஜயம் செய்வதால் அப்பெரியார் வருவதற்குள் இந்நகர் சுத்த கதர் நகரமாக மாறி அவரை வரவேற்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

அடுத்தாற்போல் இந்துக்களின் முக்கிய தீபாவளிப்பண்டிகை வருவதால், அப்பண்டிகையை கதர் பண்டிகையாக மாற்றிக் கொண்டாட வேண்டும்.

மகா ஜனங்கள் யாவரும் போலிக் கதர்களையும், சீமைத்துணிகளையும் வாங்காமல் சுத்தக் கதரையே வாங்க முன்வரவேண்டுமென்று மறுபடியும் பொது ஜனங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்,

C. P. விஸ்வநாதன்
மானேஜர்.
கதர் வஸ்திராலயம்
கோயம்புத்தூர்.

## திருவிடைமருதூர் ஹைஸ்கூலில் பார்ப்பனர்களின் அநியாயம்.

இப்பதியின்கண் சென்ற 5, 6 ஆண்டுகளாய் நடந்து வரும் ஹைஸ்கூலில் சுமார் 500 பிள்ளைகள் வாசித்து வருகிறார்கள். இப்பள்ளியில் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் சிலரே தான் வாசித்து வருகிறார்கள். இன்னும் இப்பள்ளியில் தமிழ்ப் பண்டிதரும், டிராயிங் மாஸ்டரும் தவிர மற்றவர்களெல்லோரும் பார்ப்பனர்கள்தான். இருந்தாலென். சகலரையும் சமமாகப் பாவித்து வித்தை கற்பிக்கக்கூடாதா? பார்ப்பனப் பிள்ளைகளை ஒரு விதமாகவும், பாவம்! ஏழை பார்ப்பனரல்லாத பிள்ளைகளை ஒரு விதமாகவும் நடத்துகிறார்கள். அதனால் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் அப்பள்ளியில் வாசித்து முன்னுக்கு வரமுடியாமல் போகிறது. மானிடராய்ப் பிறந்தும் இப்பாலர்களுக்கு பார்ப்பனர்களுக்குக் கிடைத்துள்ள சுதந்திரம் இல்லாமற் போனது வருந்தத்தக்கதே. அந்தோ! பரிதாபம்! கவர்ன்மெண்ட் பரீக்ஷையிலும் பார்ப்பனரல்லாத பிள்ளைகள் பார்ப்பன அநுக்கிரகத்தால் ஒருவரிருவர்தான் பாஸ் பண்ணுகிறார்கள்.

சகோதரர்களே! கேளுங்கள் கேளுங்கள். அரும்பிலேயே கிள்ளியெறிந்தது போல அபூர்வமாக வாசிக்கும் சில பார்ப்பனரல்லாத பிள்ளைகளை இவ்விதம் செய்தால் நம்மவர்கள் எப்பொழுதுதான் முன்னுக்கு வருவது?

கனவான்களே! கேளுங்கள். இவ்வருடத்தில் பாஸ் ஆகாத சில பார்ப்பனரல்லாத பிள்ளைகள் திரும்ப வாசிக்கத் தங்களை இப்பள்ளியில் சேர்க்குமாறு பார்ப்பனத் தலைமை உபாத்தியாயரைக் கேட்டார்கள். இவருடன் சில பார்ப்பனப் பிள்ளைகளும் கேட்டார்கள். அதற்கு இந்த வஞ்சகத் தலைமை உபாத்தியாயர் ரூகாக இப்பள்ளியில் இடமில்லை என்றும் T C. வாங்கிக்கொண்டு போகலாமென்றும் சொன்னார். முடிவாக இடமில்லையென்று சொன்னதின் பேரிலும், வீணாகக் காலம் கழிந்ததாலும், இவர்கள் இவ்வூரில் வாசிக்காமல் விட்டுவிட்டால் பிரயோஜனமில்லாதபடியாலும், இவர்கள் முறையே பாபநாசம், கும்பகோணம், குற்றாலம், கூற்றநாடு முதலிய இடங்களில் வாசித்து வருகிறார்கள்.

பையன் சொந்த வீட்டில் உள்ளூரிலேயே படித்தல் எவ்வளவு தூரம் நலமாயிருக்கும். ஏழைக்காசு வீண்போகாது.

குற்றாலத்திற்கு வந்திருக்கும் மற்றொரு பையனுக்கு தேகம் சரியான ஆரோக்கிய நிலையிலிருப்பதில்லை. அடிக்கடி ஜுரம் வந்துவிடும். அப்போப்பட்டவன் சகாயமில்லாமலிருந்து கொண்டிருந்தால் அவனுடைய தேக நிலையும் கல்வியும் எப்படி முன்னேறுமென்று நாமே ஊகித்துக்கொள்ளலாம். இவர்களிப்படியென்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்லவேண்டுவதேயில்லை.

கரையான் புற்றுவைக்கப் பாம்பு வந்து சுகவாசம் செய்வது போல் இச்சுயநலப் பார்ப்பனர்கள் நம்மைச் சார்ந்த மடாதிபதியின் கண்ணோக்கிலுள்ள நம்முடைய இந்தப் பள்ளியில் வந்து புகுந்து கொண்டு அநியாயமாய் வீண் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். நம் ஏழை மக்களுக்கிப்பள்ளி இடந்தராததென்ன விந்தை.

மேலே சொன்னபடி நம் பிள்ளைகளெல்லோரும் வெளியூர்களுக்குப் போய்விட தலைமை உபாத்தியாயர் தங்களைச் சேர்க்கும்படி வேண்டிக்கொண்ட பார்ப்பனக் கொழுந்துகளை யெல்லாம் சேர்த்துக்கொண்டு விட்டார்.

இன்னும் குற்றாலத்திலிருந்தும், கும்பகோணத்திலிருந்தும் இரு பார்ப்பனர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். என்னே இவர்களுடைய காலம்!

> ஆதியில் படித்த பிள்ளை அலங்கோலமாய்ப் போடுது
> பாதியில் வந்த பார்ப்பனப்பிள்ளை
> பரமானந்தம் கொள்ளுது.

இப்பள்ளியின் ஜீவியஸ்தலமாகிய மகாசந்நிதானத்தில் இதைக் கவனிப்பார்களா. இப்பார்ப்பன உபாத்தியாயரை நம்பி சகல அதிகாரத்தையும் கொடுத்ததாலல்லவா இம்மோசம் மேற்பட்டது? பள்ளிக்கும் பள்ளி மானேஜருக்கும் இழிவு ஏற்பட்டுவிட்டது.

சகோதரர்களே! மேலும் இத்தலைமை உபாத்தியாயர் ஆறும் வகுப்பிலிருந்த பார்ப்பனரல்லாத பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளாமல் தவிர்த்துவிட்டதாயும் இவ்வருடம் ஐந்தாவது பாரத்திலிருந்து ஆறாவது பாரத்திற்கு வந்திருக்கும் மீதியான பார்ப்பனரல்லாத பிள்ளைகளை பரீட்சைக்கே சேர்த்தெடுக்கப் போவதில்லையென்பது பேடித்தனமான வீண் வீரமேயாகும். பின்னால் நோக்கூடியதை சற்றும் யோசியாமல் இவ்வாறு சொல்ல நெஞ்சழுத்தமென்னே!

அருமைச் சகோதரர்களே! அஞ்சற்க. தைரியத்தை விடவேண்டாம். இவர்கள் நம்மைப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்காமலிருப்பதைப் பார்க்கலாம். அப்படியே எல்லா பார்ப்பனரல்லாத பிள்ளைகளையும் நிறுத்திவிட்டால் நாம் அவர்களை சும்மா விடப்போகிறதில்லை. அதற்குள் நமது கனம் சாமிநாதையர் பள்ளியைச் சீர்திருத்திவிடுவார். இவர்களுக்கு இன்னும் இவ்வதிகாரக்கொடி எத்தனை காலந்தான் பறக்கும்?

நிற்க இப்பாலர்கள் பரீட்சையில் தேறுகதாலும், முன்னரே வந்து விண்ணப்பித்துக் கொள்ளாததாலும், சேர்க்கப்படவில்லையென்ற வதந்தியும் உலாவுகிறது. இத்தன்மையானால் பாஸ்பண்ணவிட்டாலோ, அல்லது பாஸ்பண்ணுகிறகால அடுத்த வருடம் மறுபடியும் அப்பள்ளியிலேயே படிக்க அநுமதி வேண்டுமென்று முன்னரே கேட்டுக்கொள்ளாவிட்டாலே, ஓர் பையனை அப்பள்ளியினின்றும் பெயர்த்து விடவேண்டுமென்றாவது, பாஸ்பண்ணுகிற ஒரு பையன் தான் அடுத்த வருடம் மறுபடியும் அப்பள்ளியில் படிப்பதற்கு தலைமை உபாத்தியாயரின் அநுமதிபெறத்தான் வேண்டுமென்றாவது, எந்த அமுலிலிருக்கும் துரைத்தன கலவிச்சட்டமுறை அமைந்திருக்கிறது என்று தான் நாங்கள் கேட்கிறோம்.

அப்படியே ஓர் சட்டமிருப்பினும், இரண்டு வருடங்களாய் பரீட்சைக்கே தேர்ந்தெடுக்கப்படாமலும், மூன்றாவது வருடமாகிய 1927-ம் வருஷத்தில் பரீட்சைக்குப் போயும் மிகவும் குறைந்தமார்க் வாங்கிய பார்ப்பனப்பிள்ளையை மாத்திரம் சேர்த்துக் கொள்ளவா சொல்லியிருக்கிறது? கடைசியில் வந்து கேட்டார்களென்றால், ஒரு பார்ப்பனரல்லாத பிள்ளை கூடவா முதலில் கேட்கவில்லை. ஐந்தாவது பாரத்திலிருந்து ஆறாவது பாரத்திற்கு வந்தவர்களைத் தவிர இப்பள்ளியில் இவ்வருடம் புதிதாக ஒரு பார்ப்பனரல்லாத பிள்ளை கூட சேர்க்கப்படவில்லை. இவற்றிற்கெல்லாம் அவர்கள் வீண் நொண்டிச் சமாதானம் சொல்லுகிறார்கள்.

மகாசந்நிதானத்தில் இப்பள்ளியைக் கண்காணித்துப் பண்படுத்தாவிடின் இப்பள்ளி சந்தேகமன்றியில் சீர்குலைந்துவிடுமென்பதை நிச்சயமாய் நாம் பன்முறை வற்புறுத்துகிறோம்.

நமது குழந்தைகளை விலக்கிய பின்னர் இனியாவது பிராமணரல்லாத பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளுவார்களென பொறுத்திருக்கோம். எங்களுக்கே பொறுக்க முடியாமற்போக இதை வரைந்தனுப்ப உன்னினோம். "பிராம்மணீயம் வீழ்க"

இப்படிக்கு, (கொடுமையால் வருந்தும்)
பார்ப்பனரல்லாதார்.

## கும்பகோணம் நாயுடு மகாஜன சங்கம்.

கும்பகோணம் நாராயண புரம் ஸ்ரீராமானுஜ கட்டத்தில் 2-10-27 ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்ற கும்பகோணம் நாயுடு மகாஜன சங்க நிர்வாக சபை கூட்டத்தில்: அடியிற்கண்ட மாணவர்களுக்கு 1-10-27 முதல் வருடாந்திர பரீட்சைவரை அரைச்சம்பளம் கொடுத்து உதவுகிறதென ஏகோபித்து தீர்மானிக்கப்பட்டது.

1 10-வது வகுப்பில் வாசிக்கும் வி. ஜெகபதி.

2 9-வது வகுப்பில் வாசிக்கும் வி. சின்னு கிருஷ்ணன்.

3 7-வது வகுப்பில் வாசிக்கும் P சந்தானகிருஷ்ணன்.

4 9-வது வகுப்பில் வாசிக்கும் கே. சீனிவாசலு.

5 6-வது வகுப்பில் வாசிக்கும் எஸ். வீராசாமி

6 6-வது வகுப்பில் வாசிக்கும் எஸ். சீனிவாசலு.

அநேக காக்ஷிகளில, பொன், வெள்ளி மெடல் பெற்ற
**விதைகள், செடிகள்.**

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்வாக் இனும். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் —

20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2—0—0
10 ,, ,, ரூ 1—4—0
நாட்டுக் காய்கறி 20 ரூ. 2—8—0

ச. கோ. இ. காதர்மீரா ஸய்சபு,
ஹெட்வர்சரி தோட்டம், சேலம்.

சைவசித்தாந்தசித்தகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்
அருமைத் திருமகள்

# பண்டிதை நீலாம்பிகை அம்மைக்கும்

திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அமைச்சர்

# திருவாளர். திருவரங்கம் பிள்ளை அவர்கட்கும்

திருமணம் நடைபெற்ற ஞான்று
சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்
திருவாளர். மணி திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்
இயற்றிய

# மண மங்கலம்.

## அறுசீரடி விருத்தம்

1 உலகமெலாந் தொழுதேத்தும் பெரும்புலவன் உரைவரம்பு கண்ட செல்வன்
இலகமெனுஞ் சித்தாந்த நிலைதெளிர்ந்தோன் திட்பநுட்பஞ் செறிந்த நூல்கள்
பலபலவாச் செய்தளித்துத் தமிழகத்தை அடிமைகொண்ட பான்மை யாளன்
அலகிலரும் புகழ்வேதா சலப்பெரியன் அருந்தவத்தின் அணங்கு போல்வாள்

2 தொன்மைமிகு செந்தமிழின் திறந்தெரிந்தே ஆசிரியத் தொழிலும் பூண்டு
நன்மைமிகு நங்கையெல நாவலமோ டெழுத்துநலம் நண்ணப் பெற்றாள்
கன்மனமுங் கரைமழலை இன்சொல்லாள் கருதரிய கவின்கு ணத்தாள்
வன்மனமில் நீலாம்பா ளெனும்பெயர்கொள் மாதரசி மகிழ்வு கொண்டே

3 செவிக்கினிய மெல்லொலியால் இயற்கைவளஞ் செறிதலினற் செழித்த பண்பாற்
புவிக்குளுரை யெம்மொழியு மிணையொவ்வாத் தமிழ்மொழியிற் புலமை வாய்ந்தோன்
கவிக்குளுயர் அன்படக்கம் பொறைமுதலாம் அருங்குணங்கள் தழையப் பெற்றோன்
சுவைக்கினிய சொல்லாளன் வல்லாளன் திருவரங்கந் தூய்மை யாளன்

4 தனைமணக்கும் இம்மணமே நன்மணமென் றறிஞரெலாஞ் சாற்றிப்போற்ற
மனையறத்தைக் கைக்கொண்டு விருந்தோம்பிச் செந்தமிழை வளர்த்து நாளும்
நினைவரிய சிவபெருமான் திருவருளே யுலகமெலாம் நிலவச் செய்து
புனைபுகழார் பொதியமென இமயமெனப் பல்லூழி புவியில் வாழ்க.

5 தந்தையெவன் தவம்புரிந்தா னெனவுலகஞ் சாற்றவரும் புதல்வர்ப் பெற்று
முந்தருணை மழலைமிகு புதல்வியரு மீன்றுவந்து முதிர்ந்தே யின்பஞ்
சந்திரசூ ரியருளநா ளவனியிடைப் பலதருமந் தழையச் செய்தே
இந்திரனோ டிந்திரைபோ லின்புற்றே இனிதூழி வாழி மாதோ.

## சுத்த சாதகப் பதிப்பு.

கிறிஸ்து மதத்தவர், தமது வேதம் என்னும் பைபிளைப் (Bible) பல்லாயிரக்கணக்காக அச்சிட்டுக் குறைந்த விலைக்குக் கொடுத்து அதனை எங்கும் பரவச்செய்கின்றனர். சைவ சமயிகள் வேதாகமங்கள் அமைந்த நூல்களை அச்சிட்டுக் குறைந்த விலைக்குக் கொடாமையினால், சைவ சமய உண்மைகள் ஏழைமக்கள் வசிக்கும் இடங்களில் பரவாமல் இருக்கின்றன. இக் குறைவை ஒருவாறு நிறைவாக்க நினைத்தே, ஸ்ரீ குமாரதேவ வள்ளலார் அருளிச்செய்த சுத்த சாதகத்தைச் சுத்தமான பதிப்பாக நல்ல காகிதத்தில் அழகு பெற அச்சிட்டு ரூபாய் ஒன்றுக்கு 20 பிரதி வீதமாக, இலாபங்கருதாது கொடுக்க நிச்சயித்திருக்கிறோம். 10,000 பிரதிகள் அச்சிடுவதற்கு 500 ரூபாவரை வேண்டியதாகின்றது. சைவாபிமானமுள்ள அன்பர்கள் 50 பேர் தலைக்குப் பத்துப் பத்து ரூபா அனுப்பிவைப்பார்களானால், முற்கூறிய தொகை அச்சிட்டு முடிக்கப்படும். 10 ரூபா அனுப்பினவர்களுக்கு 200 புத்தகம் அனுப்பப்படும். ஒரு புத்தகம் பெற விரும்பும் வெளியூரிலுள்ள அன்பர்கள் 2 அணா தபால் முத்திரைச் செலவு முன்னதாக அனுப்பவேண்டும். இப்புண்ணியச் செயலுக்குச் சமயாபிமானமுள்ள செல்வர் எவரேனும் ஒரு தொகைப் பணம் நன்கொடையாக அளிப்பாராயின், அது மிக்க நன்றியறிதலோடு ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்பெயரும் புத்தகத்தில் வெளியிடப் படும்.

பணம் செலுத்துவோர், புதுவை நந்தி வெளியீட்டு மன்றம் (நந்தி பப்ளிஷிங் ஹௌஸ்) சொந்தக்காரராகிய—ரா. நாகரத்தினம் பிள்ளை அவர்கள் விலாசத்துக்கு அனுப்ப வேண்டப்படுகிறார்கள்.

அமைச்சர்,
நந்தி வெளியீட்டு மன்றம்.

## தமிழ் நாடு ராஜுக்களின் மகாநாடு.

2-10-27 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீரங்கம் ரா. ராஜகோபால் ராஜு தோட்டத்தில் அடியக்கமங்கலம் சுப்பராஜுகாரு தலைமையில் ராஜுக்களின் பெருந்த கூட்டம் ஒன்று கூடிற்று. சமீபத்தில் தமிழ் நாட்டு ராஜுக்களின் மகாநாடு ஒன்று கூட்டுவதென முடிவு செய்யப்பெற்று அதற்காவன செய்வதற்காக ஓர் தற்காலிக கமிட்டி நிருவப்பெற்றது. அக்கமிட்டிக்கு கிருமியூர் ப. நாராயணசாமி ராஜுகாருவைத் தலைவராகவும், பொன்மலை ஆர் கோபால்சாமி ராஜுகாருவைக் காரியதரிசியாகவும் தெரிந்தெடுக்கப்பெற்றார்கள். 3-10-27 திங்கட்கிழமை கமிட்டியாரின் கூட்டம் ஒன்று பொன்மலையில் அழகிய மணவாளராஜுவின் தலைமையில் நடந்தது. அம்மகாநாடு எங்கு கூடுவதென ஆலோசனைசெய்வதற்கு முக்கியஸ்தர்களை அக்டோபர்மாதம் 16-தேதி ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு ஸ்ரீரங்கத்தில் ஒன்றுகூட்டி ஆலோசிப்பதென்முடிவாயிற்று காரியதரிசி.

## இந்திய வாலிபர் சங்கம், திருபுவனம்.

முதலாவதாண்டு நிறைவுவிழா

நிகழ் பிரபவ ஆண்டு ஐப்பசித் திங்கள் 14-ம் நாள் (30—10—27) ஞாயிற்றுக்கிழமை மாலை 2-மணிக்கு பந்தல் மேடையில், தஞ்சை ஜில்லா போர்டுத்தலைவர் உயர் திருவாளர் எ.டி. பன்னீர்ச்செல்வம் பார்-அட்-லா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அது சமயம் நமது மாபெருந்தலைவர் "திராவிடன்" ஆசிரியர் உயர் திருவாளர் ஜனக சங்கர கண்ணப்பர் அவர்கள் அறிவு சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். தாங்கள் தங்கள் அன்பர்களுடன் விஜயம்செய்யப் பிரார்த்திக்கிறோம்.

திருபுவனம், இந்திய வாலிபர் சங்கத்தார்.

## பிராமணீய மொழித்த திதி.

கும்பகோணத்தைச் சேர்ந்த சாக்கோட்டை மணிகை வீ. ராமச்சந்திர நாயக்கர் அவர்கள் தன் தகப்பனார் காலஞ் சென்ற வீராசாமிநாயக்காரது 15-ம் வருஷத்திதியை பார்ப்பன புரோகிதத்தை ஒழித்துச் சொந்தக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமளித்து முடித்தார். ஷை யூர் [illegible] ம. பொன்னுசாமி நாயக்கர் அவர்களும் இக் கொள்கையை 8 வருஷகாலமாய் நடத்திவருகிறார். அதை அனுசரித்து அநேகபிரமுகர்கள் இம்முறையைப் பின்பற்றி நடப்பதாக தீர்மானித்து இருக்கிறார்கள் என்று கா. கு. நீலமேக பிள்ளை அறிவிக்கிறார்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அலைகின்றனர். ஆங்கிலமும் பிறவுங்கற்றவர் வேறு வேறு தொழில்களுக்குப் போயிருப்பதும், ஒரு தொழிலுக்கும் தன்மையற்றவரே குருக்களாக வந்திருப்பதும் கண்கூடு. மற்றும் சிலர் நம்மை ஆடுமாடுகளாகவும் காடு தோட்டங்களாகவும் பங்கிட்டுப் பத்திரங்களும் எழுதிவைத்திருக்கின்றனர். இங்ஙனம் பங்கு பிரித்துக்கொண்ட சிலர் வேறு உத்தியோகங்களில் இருப்பினும் விடுமுறை காலங்களில் வரிவாங்க வந்துவிடுகின்றனர்: ஓர் சாமியாருக்கு "போஸ்ட்மாஸ்டர்" உத்தியோகத்தில் 110 ரூபாய் சம்பளம். ஒரே மகன். இவ்வொருமகனின் கலியாணத்திற்கு அத்துணை பெரிய வருவாயுடையவர் பூனாமேட்டில் வரி வசூலித்தனர். இன்னும் பல்வேறு துறைகளில் குமாஸ்தாக்களாகவும் பிறவாறாகவும் தக்க ஊதியம் பெறுகின்றவர்கள். நம்மினும் காடு, தோட்டங்களும், பணமும் படைத்துள்ளவர்கள்: கலியாணம், கடன் என்ற பெயர் வைத்து 100, 1000 ஆக வசூலிக்கின்றனர். சென்றவருடம் ஆனைமலைச் சாமியார் அனுப்பபட்டியில் 1700 ரூபாயும் 800 ரூ. அரிசி பருப்பு சாமான்களும வாரிக்கொண்டு சென்றனராம். இங்ஙனம் நமது செல்வம் எத்துணையோ பார்ப்பனர் வரிகளுக்குக் கொள்ளைபோகின்றதே! கொடுமை! கொடுமை!

இத்துணை வரிகளைக் கொடுத்தும ஆசாரியர்களால் ஏதேனும் நன்மை அடைந்தோமா? ஆசாரியன் நம்மிடம் வந்து மனைவி மக்கள் சுகமா என கபவஞ்சக வார்த்தைகள் பேசிப் பணம் பறிப்பதைத்தவிர வேறென்ன உபதேசம் செய்தனர். அனுப்பபட்டியில் கொள்ளைபோன 2500 ரூபாய் போல எத்துணையோ ஊர்களில் போயின. அம்ம! அம்ம! அவற்றை விசாரித்தால் உள்ளம் உருகுகின்றது; உடல் உறைகின்றது; பார்ப்பனர்களுக்குக் கொடுக்கும வரிப்பணம்மட்டும் இருக்குமேயானால் பூனாமேடு ஹைஸ்கூலைப்போல ஊருக்கொன்று உண்டாக்கிவிடலாமே! நமது ஏழைக்குழந்தைகள் எத்துணைபோ பேர் படிப்பரே! அறிவு பெற்றிருப்பரே! இன்னும் எத்துணையோ ஊருக்கான நன்மைகள் செய்திருக்கலாமே!

இவ்வாறு உண்மையை உரைப்பதினால் ஆசாரியருக்கும் அவர் அடிகளை முடியில் வைக்கும் மற்றவருக்கும் மனவருத்த முண்டாகின்றதாம் அங்ஙனம் வருந்த முறக் காரணமேயில்லை. உள்ளதைச் சொன்னால் உடம்பெரிவானேன்? ஆசாரியனுக்குள்ள தன்மை முழுதும் ஓர் பார்ப்பனர் பெற்றிருப்பாரேயாகில் அவரைக் குருவாகக் கொள்ளவேண்டாமென்று கூறுவாரில்லை திருவள்ளுவர் செப்பியதுபோல்

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மைபூண்டொழுகலான்" என்னும் அந்தணர் இருப்பரேல் அவர் திருவடிகளை முடிகளிற் கொள்ளுகின்றேம்; முத்த மிடுகின்றேம். யாவரையும் குறைகூறவேண்டுமென்றே காப்புக் கட்டினேமில்லை. உள்ளன உரைத்து நல்வழிப்படுத்துவதே விருப்பம். நாம ஆராயாது கண்மூடிக் கொடுக்கும் வரிப்பணத்தால் ஆசாரியரும் தலைகால் தெரியாது அறியாமைக் குழியில் விழுகின்றனர்; அஞ்ஞான இருளில் மூழ்குகின்றனர் ஆகையால் பெரியோர்களை ஒன்று வேண்டிக்கொள்ளுகின்றேம். என்னை? சில நாட்களுக்கு நீங்கள் ஆசாரிய புருஷராதல் வேண்டும். எங்ஙனம்? உங்களிடம் வரும் சோற்றுச் சாமியாரை நோக்கி "ஆசாரிய ஸ்வாமிகளே! தாங்கள் போய் செம்மையாகச் சம்பிரதாய நூல்களைக் கற்று அர்த்த பஞ்சக ஞானத்துடன் உண்மையான அந்தணராக வாருங்கள் பின்னர் ஆசாரியனாகலாம" என உபதேசம் செய்து அனுப்பிவிடல் வேண்டும். மயங்கற்க; தயங்கற்க இங்ஙனம் ஆசாரியரை நல்வழிப்படுத்துவான் வேண்டியே காடியாவிபல் கம்ம மகாநாடும் ஒரு தீர்மானம செய்துள்ளது. அனுப்பபட்டியில் பணம் வாரிய ஆசையுடனும அப்பநாயக்கன் பட்டிக்கு ஆனைமலைசாமியார் சென்றார். அவரை அவ்வூர்ப் பாகவதர் ஸ்ரீமான் குருசாமி நாயுடு அவர்கள் அர்த்த பஞ்சகஞானம் என்பது என்னவென்று கேட்டனர் சாமியார் விழித்தனர்; பணம் பறிப்பதும் படுத்துவிட்டது. ஆகையால் அச்சமின்றி ஆண்மையுடன் ஒவ்வொருவரும் ஆசாரியரைநோக்கி அடியிற் கண்ட வினாக்களை வினவல் வேண்டும்.

1. ஸ்ரீவைஷ்ணவ தர்மங்கள் என்ன?
2. அர்த்தபஞ்சகஞானம்என்பதுயாது?
3. ஸ்ரீ விசிட்டாத்வைத சித்தாந்தத்திற்கும் மற்ற சித்தாந்தங்களுக்கும் வேறுபாடென்ன?
4. நாலாயிரப்பிரபந்தம் தமிழ்வேதமென்று கொள்ளுகின்றீர்களே அதில் வைஷ்ணவருக்குச் சாதி வேற்றுமை சொல்லி யிருக்கின்றனவா?
5. ஆசாரியன் பார்ப்பனனாகவே இருத்தல்வேண்டு மென்பதற்குப் பிரபந்தத்திலும் அவ்வாறான நூல்களிலும் ஆதாரமுண்டா?
6. ஆசாரியனுக்கு வாய் வேதாந்தம் வேண்டுமா கைவேதாந்தம் வேண்டுமா?

இவ்வாறான வினாக்களுக்கு விடை அளிப்பவர் எவராயினும் அன்னோர் ஆசாரியரே யாவர் அவர் பார்ப்பன குலத்தில் பிறந்தவராயினும் என்? எக்குலத்தில் பிறந்தவரானும் ஆசாரியரே; அந்தணரே. பார்ப்பனன் பரம்பரை என்ற முறைகளில் வரும் வீண் வெளிவேடப் போலிச் சாமியார்களுக்கு வரிகொடுக்க வேண்டாம். அவர்களுக்குப் பணம் கொடுத்தல் பெரும்பாவம் என்று அறநூல் கூறுகின்றன பணம் கொடுக்கும் பாவத்தையா பெறல்வேண்டும்? வேண்டாம் அறிவு. ஆராய்ச்சி, அனுபவமற்ற ஆசாரியனுக்குப் பணம கொடுக்கல்வேண்டாம். அர்த்தபஞ்சகஞானம் கைவரப்பெற்ற அநுபவ ஆசாரியனை அடைந்து அந்தமில் பேரின்பவீடு அடைவோம் ஆனந்தமுறுவோம்.

குறிப்பு:— இவ்விஷயத்துக்கு மறுப்பாக "குரு இகழ்வே தலமறிவாம" என்ற ஒரு கட்டுரை வெளியாகியிருப்பதால் அக்கட்டுரைக்கு அடுத்தவாரம பதிலெழுதுவோம்.

ஜனாப் ஷாபி மகம்மது அவர்களுக்கு

## ஒரு பகிரங்கக் கடிதம்,

ஜனாப் அவர்களே! சென்ற 25-8-27தேதியில் ராமநாதபுரம் ஜில்லா முஸ்லீம் மஹாநாட்டில் தங்கள் தலைமையின் கீழ் கூடிய கூட்டத்தில் "இம்மகாநாடு கலப்புத் தொகுதியை ஆதரிக்கிறது" என்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரிகிறது. ஷை மகாநாட்டில் எத்தனை முஸ்லீம்கள் கூடியிருந்தார்கள் என்றும், மஹாநாடு என்னத்திற்காகக் கூட்டப் பட்டதென்றும், நமக்கு ஒன்றும் புலப்படவில்லை. ஆனால் 26—9—27 தேதியில் வெளியான சுதேசமித்திரனில் ராமநாதபுரம் முஸ்லீம் மகாநாடு என்ற தலைப்பின் கீழ், மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்தவர்களில் முக்கியமானவர்களென்று 5, 6 இந்துக்களுடைய பெயரையும், 2 முஸ்லீம்களுடைய பெயரையும் பிரசுரித்திருப்பதைப் பார்த்தால் இந்துக்கள் தான் மெஜாரிடியாய் இருப்பதாய்த் தெரிகிறது. இப்பேர்ப்பட்ட ஒரு மஹாநாடு எப்படி முஸ்லீம் மகாநாடு ஆகுமென்று தான் கேட்கிறோம். மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த முஸ்லீம் சகோதரர்கள் யாரென்று பார்த்தால் மதுரை ஜனாப் மௌலானா சாகிப் அவர்களும், திண்டுக்கல் ஜனாப் தங்கம்முன் சாயபு அவர்களும் தான் இருந்திருக்கிறார்கள்: இவ்விரு குணவான்களும் ஒத்துழையா வீரர்கள். இவர்களைப்பற்றி பத்திரிகை மூலியமாய் நன்றாய் அறிந்திருக்கிறோம். ஆனால் ராமநாதபுரம் ஜில்லாவில் பிரபல முஸ்லீம் வியாபாரிகளுடைய பெயரையோ, மிராஸ்தார்களுடைய பெயரையோ காணோம். அந்த ஜில்லாவில் முஸ்லீம்களே இல்லையா? இல்லாவிட்டால் அதற்காக மதுரை ஜில்லாவிலிருந்து அவ்விருகனவான்களையும் இரவல் வாங்கிக் கொண்டு போவானேன். விஜயம் செய்திருந்த முக்கியமானவர்களே மதுரைஜில்லா வாசிகளாயிருந்திருப்பதால் ஷை மகாநாடு ராமநாதபுரம ஜில்லா முஸ்லிம மகாநாடு என்று எப்படி நினைப்பது என்று தான் கேட்கிறோம். தாங்கள் அய்யங்கார் ஆச்சாரியார்களிடம் தாட்சண்யத்தையோ அல்லது வேறு காரணத்தையோ உத்தேசித்து இந்திய முஸ்லீம்களின் உணர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உணராமல் சுயகாரியத்திற்காக பொது தொகுதியை ஆதரிப்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருப்பதைப் பார்த்தால் தங்களுடைய யோக்கியதை ஒரு வருக்கும விளங்காமல் போகாது. முஸ்லீமகள அரசியல் முன்னேற்றத்திற்கு தடைகல்லாயிருக்கிற தாங்கள் முஸ்லீம் மகாநாடுகளுக்குத் தலைமை வகிக்க எந்த விதத்தில் லாயக்குள்ளவர் என்பது தான் நமக்குத் தெரியவில்லை. ஸ்ரீமான் அய்யர், அய்யங்கார் கோஷ்டியாருக்கு வால்பிடித்து சுயமரியாதையை இழந்து, தங்கள் சுயநலம் கருதி திரிவதானால் அதைப்பற்றி நமக்கு கவலையில்லை ஆனால் முஸ்லீம்கள் அரசியல் முன்னேற்றத்தையே பாழ் படுத்துவதாய்

இருந்தால் யார்தான் அதைப்பார்த்துக்கொண்டிருப்பார்களென்று தாங்கள் கேட்கிறோம். ஷை மகாநாட்டில் நிறைவேற்றப் பட்ட கலப்புத்தொகுதியை ஆதரித்துப்பேசியது எந்த காரணத்தை முன்னிட்டு என்பது நமக்கு விளங்கவில்லை. தற்சமயம் இந்தியாவிலிருக்கும் இந்து முஸ்லீம் ஒற்றுமையை முன்னிட்டா, அல்லது தாங்கள் பார்ப்பன தாசராய் இருப்பதை முன்னிட்டா? அல்லது அதனால் முஸ்லீம்கள் முன்னேற்ற மடையலாமென்பதை முன்னிட்டா? அல்லது சென்ற ௵ சென்னை சட்டசபை எலக்ஷனில் முஸ்லீம்களால் முறியடிக்கப் பட்டோம் என்ற கோபத்தை முன்னிட்டா? என்பதை யோசித்துப் பார்த்தால் அதன் உண்மை தங்களுக்கு விளங்காமல் போகாது. முஸ்லீம் வாக்காளர்களாலேயே முறியடிக்கப்பட்ட தாங்கள் கலப்புத்தொகுதியால் ஜெயம் பெற முடியுமென்று நினைப்பது பகற் கனவேயாகும். இந்தியாவிலுள்ள 8 கோடி முஸ்லீம்களுக்கு தாங்கள் எந்தவிதத்தில் பிரதிநிதியாவீர்? காங்கிரசில் இருக்கிறோமென்பதைக் கருதியா? அப்படியானால் காங்கிரசை முஸ்லீம்கள் ஆதரிக்கிறார்களா? அதனால் முஸ்லீம்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டதென்பதைப் பார்த்தால் தற்சமயம் வடநாட்டில் நடக்கும் கோர சம்பவங்களேயாகும். தனித்தொகுதி இருக்கும்போதே, கோரசம்பவங்கள் நிகழும்போது பொதுத் தொகுதி ஏற்பட்டால் எப்படி சமாதானம் உண்டாகக்கூடும் என்பது தான் தெரியவில்லை. ஜனாப் "ஷாபி அவர்களே" தனித்தொகுதி இல்லாவிட்டால் இந்திய முஸ்லீம்கள் முன்னேற்றம் அடைந்திருப்பார்களா? டாக்டர் உஸ்மான் அவர்களுக்கும், சர் ஹபீபுல்லா அவர்களுக்கும் நிர்வாகப் பதவிகள் கிடைத்திருக்குமா என்பதை தாங்களே நெஞ்சில் கையை வைத்துப்பாரும். தாங்கள் மதராஸ் கார்பரேஷனில் அபேக்ஷகராய் நின்று தேர்ந்தெடுக்கப்பட்டதை உதாரணமாகக் காட்டுவது இதற்கு எப்படி பொருந்தும்? தாங்கள் அபேக்ஷகராய் நின்ற வார்டில் முஸ்லீம் வாக்காளர்கள் எத்தனை பேர். இந்து வாக்காளர்கள் எத்தனை பேர்? இந்துக்களுடைய வாக்குரிமைகள் தங்களுடைய கீர்த்தியை முன்னிட்டு கிடைத்ததா? அல்லது சீனிவாசய்யங்கார் கம்பெனியாருடைய பணச் செருக்கால் தங்களுக்கு கிடைத்ததா என்பதைத் தாங்களே யோசித்துப் பார்த்தால் தங்களுக்கு விளங்காமல் போகாது. தாங்கள் காட்டும் இந்த உதாரணம் ஏன் ஜனாப் அமீதகான் அவர்களுக்கு பொருந்தவில்லை என்பதற்குக் காரணம் சொல்லுவீரா? ஆகையால் தாங்கள் சுயநலத்தையும் கீர்த்தியையும் முன்னிட்டு சுயமரியாதையை இழந்து பார்ப்பனமாய் கையில் சிக்குண்டு இப்போதெல்லாம் குலத்தைக் கெடுக்க வந்த கோடரி காம்பு போல் முஸ்லீம்களின் முன்னேற்றத்திற்குத் தடையாய் பிரசாரம் செய்வதை இனிமேலாவது நிறுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். முஸ்லீம்களுக்கு பொதுத் தொகுதி வேண்டுமென்று காங்கிரஸ் மகாசபையிலும் தீர்மானம்செய்திருக்கிறார்களே!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசாரங்கள் இன்னொரு காலத்திற்கு பயன்படா. ஆகவே இக்காலத்தும் நமது ஜனசமூகத்திற்குச் சில ஆசாரபேதங்கள் அவசியமாய் ஏற்படின் அதை மாற்றிக்கொள்ளவே இந்து சாஸ்திரங்கள் இடம் கொடுக்கின்றன என்றும், தங்கள் காரியங்களுக்கு மட்டும்மாற்றி, மற்றவர்களை இந்து சாஸ்திரத்தின் பேரால் தடுப்பவன் சண்டாளனென்றும் ஜனசமூகங்களை ஒடுக்கி அடிமை புகுத்தும் எந்த இந்து சாஸ்திர பிரமாணங்களாயிருந்தாலும் அது ஒழிய வேண்டுமென்றும் நாங்கள் சொல்லுகிறோம்.

தீண்டாமையை மாற்ற முடியாது. இந்து சாஸ்திரங்கள் இடம் கொடுக்கவில்லை என்று சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். சனாதனிகளான உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். கலியுகத்திற்கு பராசஸ்மிருதி பிரமாணம். அதைச் செய்தவர் பராசர், அவர் புலைச்சியின் மகன். புலைச்சியின் மகன் எழுதின ஸ்மிருதி எல்லாருக்கும் பிரமாணம். இதில் தீண்டாமை எப்படியிருக்கும். பராசர் தகப்பனால் வளர்க்கப்பட்டவரல்ல. புலைச்சியின் வயிற்றில் பிறந்து அவர்களாலேயே வளர்க்கப்பட்டு ரிஷியானவர். தசரதன் ராமனை காட்டிற்குப் போகச்சொல்ல மனமிலாதிருந்தும் மாற்றாந்தாயான கைகேயியின் வார்த்தையைக் கேட்டு தந்தையைவிட தாயே சிறந்தவளென்று சொல்லிக் காட்டுக்குப் போன ராமனும், தாயின் மரணத்திற்கு காரணமாயிருந்த கார்த்தவீரியார்ச்சுனனையும் க்ஷத்திரிய வம்சங்களையும் கொன்ற பரசுராமனையும் பின்பற்றும் ஆரிய ரிஷிக் கூட்டம் தன் தாயின் ரிஷி கூட்டத்தாரை சண்டாளரென்று எழுதுமா என்பதை நீங்களே ஆலோசித்து பாருங்கள். மகாத்மா அவர்கட்கு இந்து வேதத்திலுள்ள சமஸ்கிருதம் தெரியுமோ தெரியாதோ நமக்குத்தெரியாது. சுவாமி விவேகானந்தருக்கு இந்து சாஸ்திரத்தின் கருத்துத் தெரியாது என்று சொல்ல முடியாது. நம் தேசத்துக்கிணற்றுத்தவளைப் பண்டிதர்கள் போகட்டும். அமெரிக்கா, இங்கிலாண்டு, ஜர்மனி தேசத்து பண்டிதர்கள் அவரைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை கவனிப்போம். ஸர்வமத சபையிலே மிக்க மனோகரமாய் விளங்கிய மூர்த்தி விவேகானந்தரே என்றும், இந்த இந்து சந்நியாசியை தேவாம்சத்தாற் பிறந்த விசேஷ வாக்சாலர் என்றும், மிக்க அழுத்தமுள்ள கிருஸ்தவர்கள்கூட உள்ளபடியே இவர் மனிதருக்குள்ளே ஒரு ராஜகுமாரர் என்றும், நம் நாட்டுப் பண்டிதர்களுடன் ஒப்பிட்டுக்கூற முடியாதபடி அவ்வளவு அபாரகல்வி தேர்ச்சியுள்ளவராக விளங்குகிறார் என்றும், ஹார்வார்ட் கோத்துப் பண்டிதர்கள் அமெரிக்கா பண்டிதர்களுக்கு எழுதிய கடிதத்தில் சுவாமி விவேகானந்தரின் பாண்டித்யம் நம் அனைவருடைய திரண்ட கல்வித்தேர்ச்சியையும் மிஞ்சி நிற்கின்றனதென்றும் புகழ்ந்திருக்கிறார்கள். உலகத்தில் பண்டிதர்களுக்குள் சிறந்தவரான ஜர்மன் தேசத்துப் பண்டிதர் தாய்சென் சுவாமியை கண்ட ஆனந்தத்தில் தன் பேரையே இந்துப்பேராக மாற்றிக்கொண்டாராம். கல்கத்தாவிலும் சென்னையிலும் சபைகள் கூடி அனுப்பின வாழ்த்து அனந்தம். அவருக்கு சென்னையிலும் தமிழ் ஜில்லாக்களிலும் கற்பூர தீபமும் பூரண கும்பமும் எடுக்கப்பட்டன. இப்பேர்ப்பட்ட வைபவத்தோடு உலகெலாம் விளங்கின சுவாமி விவேகானந்தர் நம் நாட்டு வைதீகர்களைப்பற்றி சொன்னதை கீழே எழுதுகிறேன். அபிவிருத்திக்கு எப்பொழுதும் எதிரிடையாயிருக்கின்ற புரோகிதர்களை வெறுத்துத் தள்ளுங்கள் அவர்கள் ஒருபொழுதும் சீர்பட மாட்டார்கள்; அவர்களுடைய இருதயங்கள் ஒருபொழுதும் விசாலமாகா. அவர்கள் நூற்றுக்கணக்கான வருஷங்களாயுள்ள மூடக்கொள்கை கொடுமை, சண்டாளத்தன்மை, இவற்றினின்றும் முளைத்தெழுந்தவர்கள். வைதீகக் கொடுங்கோன்மையைக் களைந்தெறியுங்கள் அப்பொழுதுதான் மனிதனாவீர்கள். வாருங்கள். வந்து ஜனசமூகம் எங்ஙனம் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றன என்பதை பாருங்கள் என்றார். மாளவியாவுக்கும் சதாசிவ அய்யருக்கும்பண்டிதர்களென்றே பெயர். அவர்கட்கு சமஸ்கிருதம் தெரியாதென்று சொல்லமுடியாது. ராம் மோகனராய் கேசவ சந்திரசேனர் முதலியவர்கள் ஸ்மிருதிகளையே மாற்றி எழுதப் புறப்பட்டவர்கள். இவர்கட்கு சமஸ்கிருதம் தெரியும். இவர்களும் தீண்டாமை கூடாது தீண்டாமை சாஸ்திரத்திலில்லை என்றார்கள்.

---

அவர்களுடைய நோக்கம் என்ன என்பதை தாங்கள் உணரவில்லையோ? இது அய்யங்கார் கம்பெனியாருடைய சூழ்ச்சி என்பது தங்களுக்கு தெரியாமல் போயிற்று? பிராமணரல்லாதார்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கிறார்கள், அதனால் பிராமணர்களுக்கு பிழைப்புக்கு வழியில்லை என்பதைக் கருதி காங்கிரஸ் சூத்திரதாரிகளாக முஸ்லீம்களைப்பிடித்து "முஸ்லீம்கள் பொதுத் தொகுதியை ஆதரிக்கிறார்கள் என்று கத்தச் சொன்னால் பாமர மக்களிடத்தில் முஸ்லீம்களே வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். அது நாட்டுக்குத் தீமை விளைக்குமென்று ஒப்புக்கொண்டார்கள்" என்று அய்யங்கார் கம்பெனியார் கூச்சல்போடுவதற்கு ஹேதுவாய் இருப்பதோடல்லாமல் இதனால் பிராமணரல்லாதார் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கேட்கமாட்டார்களென்று, தங்கள் இனத்தாருக்கு இன்னும் உத்தியோக எலும்பு அதிகமாய் கிடைக்கவேண்டுமென்று செய்கிற சூழ்ச்சியேயல்லாமல் முஸ்லீம்களுக்கு பொதுத்தொகுதியால் என்ன நன்மை ஏற்படக்கூடுமென்பதைத் தங்களால் சொல்ல முடியுமா? இவ்வித சூழ்ச்சிகளுக்காகவே பிராமணர்கள் தங்களைப்போலுள்ளவர்களை ஒரு கருவியாக உபயோகிக்கிறார்கள் என்பதைக் கண்டிப்பாய் அறியவும். ஆகையால் தாங்கள் இனிமேலாவது இத்தியாதி விஷயங்களில் ஈடுபட்டு சுயமரியாதையையும் மனசாட்சியையும் விற்று, முஸ்லீம்களின் முன்னேற்றத்தை பாழாக்காமல் இருக்கும் படியாய் கேட்டுக்கொள்கிறேன். எச். பாஷா சாயபு

---

## பிராமணீய மொழிந்த திதி.

நாளது வருஷம் 25-9-27-ந் தேதி ஸ்ரீமதி அம்மணி அம்மாள் கோட்டபமங்கல் தனது பெற்றோர்களின் வருஷாந்திரத்திற்கு பிராமணப் புரோகிதர்களை நீக்கி தாமாகவே தமது பந்துக்களுள் ஒருவரைக் கொண்டு மந்திரம் ஓதுவித்து, அது முடிந்ததும் தமது பந்துமித்திரர்களுக்கு அன்னமிட்டுத் தாமும் புசித்தார். இதனால் அம்மலை நாட்டிலும் பார்ப்பனீயம் ஒழிந்ததாகத் தெரிகிறது என்று ஒத்தகமந்து திரு வெங்கிடசாமி அவர்கள் எழுதுகிறார்.


## மின்சார ரசம்.

வெகு அபூர்வமான மருந்து! ஆச்சரியகாமான குணம்!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை. அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சித்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகுக்குள் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்திபெற்றது துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.




குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நாலு திசைகளினின்றும் ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும். இன்றைக்கே எழுதுங்கள். உங்களை ஆச்சரிய முறச்செய்யும் கைகண்ட மருந்து

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம்.

---



நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

### பழனி. சி. எம். சாமி மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரிய யஹானின் முறை அபார தாது புஷ்டியும், பலமும, பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும் இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

### குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி.—நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பகோருகிறேன் கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

### குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரதத வாந்தி இளைப்புஇவைகள்குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

**சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்**

**C. மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னைபிராஞ்சு ஆபீஸ்:—முருகன் கம்பெனி 43 அரண்மனைக்காரத் தெரு ஜி. டி. சென்னை

---

## திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபை.

இச்சபையின் 38-42-ஆம் ஆண்டுநிறைவு விழா, நிகழும் பிரபவ ஆண்டு புரட்டாசித் திங்கள் 29-30 (15, 16-10-27) ஆம் நாட்களில், திரிசிபுரம் மலைக்கோவில் நூற்றுக்கால் மண்டபத்தில் நடைபெறும்.

அப்பொழுது, பல்லாவரம் பொது நிலைக் கழக ஆசிரியர் உயர் திரு. சுவாமி வேதாசலம என்னும் மறைமலை அடிகள் அவைத் தலைமை தாங்கியருளுவார்கள்; புலமைசான்ற பேரறிஞர்களால் அரும்பெரும் பொருள்கள்பற்றிச் சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தப்பெறும்.

அந் நாட்களில் தாங்கள் தமருடன் வந்திருந்து கேட்டு இன்புற்று விழாவைச் சிறக்க நடாத்தியருள்க.

ம. அ. சந்திரசேகரம் பிள்ளை.
தலைவர்.

ம. பெரியசாமி பிள்ளை,
அமைச்சர்.

---

## "குடி அரசு" நிருபர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு"ப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், காகிதத்தின் ஒரு பக்கத்தில், வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம்விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம். பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

மானேஜர்,
"குடி அரசு"

---

## சுப்பிரமண்யர் கவசசத்து.

சகலகாரியங்களும் அனுகூலம். சகலவசியங்களும் ஏற்படும். விசுவாசம், ஜெயிதியை கொடுக்கும். பயங்கரங்கள் நீங்கும். தரித்திரம் முதலியது அணுகாது.

சத்து 1-க்கு விலை ரூ. 2 தபால் செலவு வேறு

இன்னும் வேற விஷயங்களுக்கும் எழுதி தெரிந்து கொள்ளவும். அன்னிய நாட்டு வாசிகள் முன் பணம் தபால் செலவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி. எஸ். அய்யர், சுப்பிரமண்ய உபாசி,
பழனி Palni P. O. (S. I.)

---

## "அறிவு விளக்கம்."

ஓர் மாதாந்திரப் பத்திரிகை

வருடசந்தா தபாற்கூலி உள்பட 6 அணா

மாதிரிப்பிரதி இனம்.

"அறிவு விளக்கம்" ஆபீஸ்.
உடுமலைப்பேட்டை.

# கட்டி வெள்ளி நகைகள்

## தீபாவளி! பண்டிகை தீபாவளி!!

## வெள்ளி நகைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு, செயின், அரைஞாக்கொடி, கெங்காதரக் கொடி, பீலி வகையறாக்களும் இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், தோடு வகையறாக்களும் அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலைமானம் பட்டு லேஞ்சுகளும், வெண்பட்டுவகையறாக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 ஜெ. லேஞ்சுகளும், இன்னும் பலவித தினுசுகளும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விலைகள் குறைத்து இருக்கிறோம் வேண்டியதற்கு ஆர்டர் எழுதினால் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்

விலாசம்,

தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்

தந்தி விலாசம் "சராப்" சேலம்

சருப் & ஜவுளி வியாபாரம்

குகை, சேலம். (S India)

## ஞான திருஷ்டி அல்லது திரிகால தீபம்.

இந்நூல் வடமொழியில் முன்னோர்களால் பனை ஓலைச் சுவட்டில் எழுதியிருந்ததை இப்போதுதான் தமிழில் புஸ்தக ரூபமாக அச்சிடப்பட்டது. இப்புஸ்தகம் ஒன்று உங்களிடம் இருக்குமானால் யார் எக் கேள்வி கேட்டாலும் ஜோஸ்யனைப் போன்ற பதிலும் நீங்கள் நினைக்கும் சகல காரியத்தின் பலாபலன்களையும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். உங்கள் வாழ்நாள் முழுமையும் ஜோசியரைத் தேட அவசியமே இல்லை. தபாற் செலவுடன் விலை ரூ 1

ஜானகிராம் அன் கம்பெனி, வெங்கட ராமய்யர் வீதி. மதராஸ்.



# கதர்ப் பத்திரிகைக்கு

## வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம் அல்லது 8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இரு முறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும், எட்டுப் பக்கங்களடங்கிய

## "குடி நூல்"

என்ற கதர்ப் பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு.



# கதரன்பர்களுக்கு

## வேண்டுகோள்.

வரும் தீபாவளியன்று கதரணிவது கடமையல்லவா, அன்றைய தினம் முக்கியமாக கதர் பனியனாவது அணியவேண்டும் நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0


32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமான கதர்ஜவுளி தினுசுகளும் கிடைக்கும் விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்

M. V. கருப்பண்ணசெட்டியார்,

திருப்பூர்,

(தென் இந்தியா)



## பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலையமாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்

லன் கம்பெனி, தஞ்சாவூர்.

## மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

## மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர்குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ. 4 வி. பி. வேறு கேட்லாக் இனாம்.

## சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, சந்ததி வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனாம் விலை ரூ. 2. வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்சங்கோடு.

## கதர் வேண்டுமா?

சர்கா சங்க அத்தாட்சி பெற்ற சுத்தக்கதர் தமிழ் நாட்டுத் தலைவர்கள் நாயக்கர் நாயுடு அவர்களால் ஆதரிக்கப்பெறும்

லக்ஷ்மி குடி நூல் கதர் சாலை

தயாரிக்கும் கதரையே

பிராமணரல்லாதார்களே ஆதரியுங்கள்.

பிராமணரல்லாதார் முதலைக்கொண்டு முயற்சியைக்கொண்டு அவர்கள் நன்மைக்காக உழைப்பது.

உடனே முன் பணத்துடன் ஆர்டர் செய்யுங்கள்.

தபால், ரயில், கப்பல் மூலம், நிடம் சரக்கு, நியாயமான விலைக்கு அனுப்பிவைக்கப்பெறும்.

விலாசம் :

லக்ஷ்மி குடி நூல் கதர் சாலை,

(ஸ்டோர்) ஈரோடு

## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம் குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.




64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாசம் பிரஸ்.

அருணாசல முதலி வீதி, மதராஸ்

முன் விலை ரூ 14. இப்பொழுது ரூ 7.

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.